பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 12 செவ்வாய்க்கிழமை 29.08.2023 கதிர் 291

# மருந்துத் தட்டுப்பாட்டால் பேரழிவு

## அரச வைத்தியர்கள் சங்கம் அறிவிப்பு

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மருந்து தட்டுப்பாடு நாட்டில் பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேயாளிகளில் சுமார் 40 வீதமானோர் வைத்தியசாலைகள் மீதான நம்பிக்கையை இழந்து விட்டனர் எனவும் இதன் காரணமாக அவர்கள் வைத்தியசாலைகளுக்குச் செல்ல அச்சப்படுகின்றனர் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர்வைத்தியர்ருக்ஷான்பெல்லன தெரிவித்தார்.

மருந்து தட்டுப்பாடு காரணமாக நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து உள்ளதால் இது மிகவும் ஆபத்தான நிலைஎனவும்வைத்தியர்தெரிவித்தார்.

நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார்.

மருந்துகள் இல்லாத இந்த நிலை சாதாரணமாகிவிட்டது. இதை ஒரு சாதாரணசூழ்நிலையாகமக்கள்ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் 2

## இனி து ரகசியம் அல்ல!

கொழும்பிலிருந்து பத்திரிகையாளரான நண்பர் நேற்று அழைப்பெடுத்தார். ஏதாவது முக்கியமான விடயங்கள் இருந்தால் தவிர அழைப்பெடுக்கும் வழக்கம் கொண்டவரல்லர் அவர். ஸ்மார்ட் மொபைலில் அவரது எண் விழுந்ததுமே எங்கேயோ என்னவோ பிரச்சினையாகிவிட்டது என்று நினைத்துக்கொண்டே எடுத்தேன்.

சுற்றிவளைத்துப்பீடிகைஎதுவும்போடாமல் நேரடியாக விடயத்துக்கு வந்தார். நீங்கள் இன்றைக்குப் போட்டிருக்கும் தலைப்புச் செய்தி சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது, உறுதிப்படுத்திக்கொண்டா வெளியிட்டீர்கள் என்றார். அந்தக் கேள்விக்கு அவர் என்னிடமிருந்து பதிலை எதிர்பார்த்தமாதிரித் தெரியவில்லை. முக்கியமான விடயங்களில் முடிந்தவரைக்கும்-செய்திஅச்சுக்குப்போகும் கடைசி நிமிடம் வரைக்கும்கூட - அதனை உறுதிப்படுத்துவதில் கவனமாக இருப்போம் என்பது அவருக்கு சர்வ நிச்சயமாகத் தெரியும். 2

## கொழும்பில் நேற்றும் ஒருவர் சுட்டுக்கொலை

கொழும்பில் நேற்றும் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம்வெல்லம்பிட்டிபிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஓட்டோவில் பயணித்த 47 வயதுடைய நபரே இவ்வாறு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார்சைக்கிளில்வந்தஇனந்தெரியாத இருவர் கைத்துப்பாக்கியால் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் 2

குருந்தூர்மலை உள்ளிட்ட

## சர்ச்சைக்குரிய இடங்களை நேரில் எம்.பிக்கள் அதிகாரிகள் பார்வை



(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு குருந்தூர், தண்ணிமுறிப்பு, நித்தகைகுளம் பகுதிக்கு நடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலக மற்றும் தொல்லியல்த்திணைக்கள அதிகாரிகள் நேற்று நேரில்சென்றுநிலமைகளை ஆராய்ந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்டகாலமாகச் சர்ச்சைக்குரிய இடமாகவுள்ள குருந்தூர்மலை, தண்ணிமுறிப்பு, நித்தகைகுளம் பகுதிகளில் இருந்து விரட்டப்பட்ட தமிழ் மக்களின் நிலங்களை 2

## உற்பத்தியில்லா உப்பளத்திற்கு தளங்களப்பில் 100 ஏக்கர் காணி

### அமைச்சரவையிடம் அனுமதி கேட்கப்படுகிறது

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம் தனங்கிளப்பில் அமைக்கப்பட்ட உப்பளத்தில் உற்பத்தி தோல்வியடைந்தபோதும் அதற்கென ஒதுக்கப்பட்ட காணியை விரிவாக்கிவழங்குவதற்கான அனுமதி கோரி அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உப்பள விரிவாக்கத்துக்கென 100 ஏக்கர் காணியை ஒத்துக்குவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

யவ்னா சோல்ற் லிமிட்டட் என்னும் நிறுவனம் இந்த உப்பளத்தை அமைப்பதற்காக 2021 இல் விண்ணப்பித்திருக்கிறது.அது தற்போதுஅமைச்சரவையின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தனங்கிளப்பில் அமைக்கப்பட்டஇந்தஉப்பளத்திற்காக 19 கெக்டேயர அல்லது 50 ஏக்கர் நிலம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இந்தற்கான பரிந்துரைய 2019 சாவகச்சேரி பிரதேச செயலாளர் வழங்கியிருந்தார். இதையடுத்து அங்கு உப்பு உற்பத்தியைத் தொடங்குவதற்கான ஆயத்தப் பணிகள் இடம்பெற்றன. உப்பளப் பாத்திகள் 2

## இனவாதிகளின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் சிக்க வேண்டாம்

### மக்களிடம் தேசிய மக்கள் சக்தி கோரிக்கை

'மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைத்து பிரித்தாளும் சூழ்ச்சி மூலம் ஆட்சியைத் தக்கவைப்பதற்கும், பிடிப்பதற்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. குருந்தூர் மலை விவகாரம், கஜேந்திரகுமார் எம்.பியின்வீடுசுற்றிவளைப்பு என்பன இவற்றின் அங்கங்களாகும். இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் மக்கள் சிக்ககூடாது.'

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பொரளை தொகுதி கூட்டத்தில் நேற்று பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

2005 இல் ரணிலும், மஹிந்தவும் அரசியல் எதிரிகள் என்றனர். 2010 இலும்இருவருக்கிடையிலும் போட்டி என்றனர். 2015 இலும் இரு அணிகளாகவே போட்டியிட்டனர். 2019 இல் இரு அணிகளில் இருந்தனர். ஆனால், 2023 இல் இணைந்து ஆட்சி அமைந்துள்ளனர். இதுதான் இவர்களுக்கிடையிலான அரசியல் டீல். பிளவுபட்டிருப்பதுபோல் காட்டிக்கொள்வார்கள், எனினும், உள்ளுக்குள் இணக்கம் இருக்கும்.

2005 இல் போரை முடிப்பது யார் என்றும், 2010 இல் போரை முடித்தது யார் என்றும் பிரசாரம் இடம்பெற்றது. 2015 ஜனாதிபதித் தேர்தலில் சர்வாதிகாரமா, ஜனநாயகமா எனப் பிரசாரம் இடம்பெற்றது. 2019 இல் தேசிய பாதுகாப்பு பற்றி பேசப்பட்டது. இதன்மூலம் ஏனைய அனைத்துப் பிரச்சினைகளும் 2

## அன்டிபயட்டிக் மருந்துக்கு உயிரிழப்பை அடுத்து தடை

நுண்ணுயிர் கொல்லி மருந்துகளில் ஒன்றான கோ-அமொக்ஸிக்லாவின் பயன்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகசுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

இதுகுறித்துஅவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர் ஒருவர், குறித்த நுண்ணுயிர்கொல்லிமருந்து செலுத்தியதை தொடர்ந்து உயிரிழந்துள்ளார். இதனைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வெட்டுக் காயத்திற்கு சிகிச்சை பெறுவதற்காக வரக்காபொலயிலிருந்து வந்த 50வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 2

## பிரமிட் மோசடியின் மூளையாக செயல்பட்ட 2 சீனர்கள் சிக்கினர்

(ந.லோகதயாளன்.)

பணத்தைச்சுருட்டிவிட்டு களவு போனதாக நாடகமாடிய இரு சீனர்களும் அவர்களிற்கு உதவிய இரு இலங்கையர்களும் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச மட்ட பிரமிட் வகை மோசடிகளில் ஈடுபட்டு பல கோடி ரூபாய் பணத்தை ஈட்டிய சீனர்கள், அதனைச் சூதாட்டத்தில் தோற்றுவிட்டு அந்தப்பணம்களவுபோனதாக நாடகமாடியதைப்பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

இந்தஇருசினர்களினதும் மோசடிக்குஉதவிய இரண்டு இலங்கையர்களையும் பொரளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு சீனர்களும் இலங்கை நாட்டில் 2

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை எதிர்த்து கொழும்பில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம்



உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் போது ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றை அரசாங்கம் பயன்படுத்த முனையும் செயற்பாட்டுக்கு எதிராக கொழும்பில் பெரும் போராட்டம் நீதிமன்றத் தடைக்கு மத்தியிலும் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு, கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்னால்நேற்றுஇடம்பெற்ற இப்போராட்டத்தில், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின்பிரதிநிதிகள்மற்றும் பொதுமக்கள் என்று நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்றுகூடி அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர்.

அப்பாவித் தொழிலாளர்களின் எதிர்காலத்தை பாழாக்காதே, தொழிலாளர்களைசிதைக்காதே, ஈ.பி.எப்., ஈ.ரி.எப் ஆகியவற்றில் கைவைக்காதே உள்ளிட்ட கோசங்களைஎழுப்பியதோடு பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

போராட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு நீர்தாரைவாகனங்கள்நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததோடு கலகமடக்கும் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரும் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.

முன்னதாக, முன்னிலை சோசலிசக்கட்சியுடன்இணைந்த தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்துநடத்தவிருந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்குத் தடை விதிப்பதாக கோட்டை நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டிருந்ததது

கோட்டை பொலிஸார் முன்வைத்த விடயங்களை கருத்திற்கொண்டு இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதோடு, தொழிலாளர் போராட்ட மத்திய நிலையத்தின் ஏற்பாட்டாளர் துமிந்த நாகமுவ, ஐக்கிய மக்கள் சக்தியின் முஜிபுர் ரஹ்மான் மற்றும் ஹிருணிகா பிரேமச்சந்திர, சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சரித்த ஹேரத், வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட 24 பேருக்கு கொழும்பின் சில பகுதிகள் மற்றும் 2

## உள்நாட்டில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில் விசாரணை

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அறிவிப்பு

நாட்டில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் இனிமேலும் செயற்பட முடியாது. அவை தற்போது பதிவு செய்யப்பட்டு வருகின்றன என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில்நேற்றுநடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான்அலஸ்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் அதிகாரிகளின் நியமனங்களின் போது, அரசியல் தலையீடுகள் இடம் பெறுவது தடுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த பொலிஸாரின் நலன்புரிச் சேவைகள் பலவற்றை தற்போது நடைமுறைப்படுத்திவருகின்றோம்.

தற்போது இணையவழி ஊடாக கடவுச் சீட்டுகளை வழங்கும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. பொது மக்களுக்கு செயற்திறன் மிக்க சேவைகளை வழங்கும் நோக்கில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் செயற்படுத்தப்படும் தொழில்நுட்ப உபகரணங்களை நவீனமயப்படுத்த அவசியமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாகஅரச சார்பற்ற நிறுவனங்களைப் பற்றி அதிகம் பேசப்படுகிறது. இது தவிர இந்நாட்டில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பிலும் விசாரணைகள் 2

## உள்நாட்டு வரித் திருத்தம் குறித்த மனுக்கள் மீது விசாரணை நிறைவு

ஆளும் தரப்பால் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள, உள்நாட்டு இறைவரித்திருத்தச்சட்டமூலத்திற்கு எதிரான மனுக்கள் மீதான பரிசீலனை, நிறைவு செய்யப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் விரைவில் சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தேசிய கடன் மறுசீரமைப்பின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டிய பிணைமுறிகளின் மீள் விநியோகம் எதிர்வரும் செப்டம்பர் 11 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான்சேமசிங்கதெரிவித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டமூலத்திற்கு எதிரான மனுக்கள் உயர் நீதிமன்றில்தொடரப்பட்டுள்ள வழக்கில்தீர்ப்புவழங்கப்படும் வரையில் இவ்வாறு பிணைமுறிகளின் மீள் விநியோகம் ஒத்திவைக்கப்படுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நான் முன்னர் பணியாற்றிக்கொண்டிருந்த பத்திரிகையில்போர்க்காலத்தில்இரவில் ஒரு செய்தி தொலைபேசி மூலம்கிடைத்தது. 2002இல் தொடங்கிய சமானதானத்துக்கான காலம் முடிவுக்கு வந்துகொண்டிருந்த நேரம் அது. 2005ஆம் ஆண்டுக் காலம் என்று நினைவு. ஆங்காங்கு கிளைமோர்கள் வெடித்துக்கொண்டிருந்தன. இரவில் யாரும் பயணிப்பது கிடையாது. இரவில்பயணித்த அம்புலன்ஸ்களின் மீதுகூட பயத்தில் துப்பாக்கிச்சூடுகள் நடந்துகொண்டிருந்த காலம். இரவில் ஊரடங்கு உத்தரவு இல்லை என்றாலும் 7 மணிக்குப் பின்னர் ஊர் முற்றிலும் அடங்கித்தான் இருந்த காலம்.

அப்படிப்பட்ட இரவில் ஒரு தொலைபேசி அழைப்பு பத்திரிகை அலுவலகத்திற்கு வந்து. அழைப்பெடுத்தவர்ஒரு பெண். தன்னை ஒரு தாதி என்றுஅவர்அடையாளப்படுத்திக்கொண்டார். வல்லையில் இராணுவ வாகனத்துடன் மோதி பத்திரிகையாளர் ஒருவர்சம்பவஇடத்திலேயே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்தார். மந்திகை வைத்தியசாலையில் அவரது சடலம் வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துவிட்டு அழைப்பைத் துண்டித்து விட்டார். தகவல் உண்மைதானா என்று அறிய எல்லா வழிகளிலும் முயன்றோம். அந்தப் பத்திரிகையாளரின் தந்தையின் வீட்டுக்கு அழைப்பெடுத்து தகவலை நேரில் சொல்லாமல் நிலமையை விசாரித்தோம். இப்போது ஒரு மணி நேரம் முன்னதாகத்தான் மகன் வீட்டிருந்து புறப்பட்டுச் சென்றார் என்று தந்தை சொன்னார். ஒருவேளை போகும் வழியில் விபத்து நிகழ்ந்திருக்கலாமோ இவர்களுக்குத் தகவல் தெரியாமலிருக்குமோ என்கிற சந்தேகம். அழைப்பு வந்த தொலைபேசிக்கு மீண்டும் அழைப்பெடுத்தால் பதிலில்லை. வைத்திய சாலைக்குஅழைப்பெடுத்தால் அவர்கள் தெளிவான பதிலை வழங்கவில்லை. நாளை காலையில் வந்து பாருங்கள் என்றார்கள். கிடைத்த தகவலையும் முற்றிலும்நிராகரிக்கமுடியாத நிலை. உள்ளூரில் இருந்த பத்திரிகையாளரையும் தொடர்புகொள்ள முடியவில்லை.

நேரம் அதிகாலையைக் கடந்துகொண்டிருந்தது. என்னசெய்வது என்று தவித்துக்கொண்டிருந்துவிட்டு விபத்தில் பத்திரிகையாளர் இறப்பு என்கிற செய்தியைத் தயார்செய்து முதல்பக்கத்தில் வடிவமைத்து அச்சுக்கும் அனுப்பிவிட்டோம். ஆனால், உறுதிப்படுத்தாமல் எப்படி செய்தியை வெளியிடுவது, நாளை தவறாக இருந்தால் பெரும் களேபரமாகிவிடுமே என்கிற உறுத்தல் இருந்துகொண்டே இருந்தது. உதவியாளரை அழைத்து மற்றொரு செய்தியையும் தயார்ப்படுத்தி அவரிடம் கொடுத்துவிட்டு,நான்மந்திகை வைத்தியசாலைக்குப் போகின்றேன், அங்கே செய்திஉண்மையானஎன்று உறுதிப்படுத்திக்கொண்டால் பத்திரிகை வெளியே போகட்டும், இல்லைஎன்றால் எப்படியாவது அங்கிருந்து போன் செய்கிறேன், அச்சடிப்பதை நிறுத்திவிட்டு இந்தச் செய்தியை மாற்றி புதிய பக்கத்தை அச்சடியுங்கள் என்று தெரிவித்துவிட்டு, என்ன ஆனாலும் பறவாயில்லை என்கிற குருட்டுத் தைரியத்துடன் புறப்பட்டேன்.

அப்போதுநேரம்அதிகாலை 4 மணியாகியிருந்தது. விடியும் நேரம் என்பதால் வீதியில் சுடக்கிடமாட்டார்கள் என்று எனக்கு நானே தையரியத்தைக் கொடுத்துக்கொண்டு அரை மணி நேரத்தில் மோட்டார் சைக்கிளில் மந்திகையைப் போய்ச் சேர்ந்தேன். அங்கு விசாரித்தத்தில் எந்தவொரு விபத்தும் அதற்கு முன்னிரவில் நடந்ததாகத் தகவல் இல்லை. உயிரிழந்தவர்களின் சடலம் எதுவும்வைத்தியசாலைக்கு வந்திருக்கவுமில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டாயிற்று. கிடைத்த தகவல் பிழையானது என்பது இப்போது உறுதி. உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்குஅருகில் இருந்துஒருகொமினிகேசன் கடையை அந்த இருட்டிலும் விசாரித்துப் பிடித்து 10 நிமிடங்களாகக் கதவைத் தட்டி - உடைக்காத குறை - உள்ளேஇருந்தவரைஎழுப்பி அங்கிருந்து தொலைபேசி அழைப்பெடுத்து அச்சுப் பணியை நிறுத்தி அந்த விபத்துச் செய்தியை நீக்கிவிட்டு புதிய பக்கத்தை அச்சுக்குக் கொடுக்கும்படி சொன்னேன். அப்போது வரையில் பல ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டுவிட்டன. மறுநாள் அவற்றை அப்படியே தீயிட்டுக் கொழுத்தினோம். செய்தியை உறுதிப்படுத்துவதில் உயிராபத்தையும் பணத்தையும் பொருட்படுத்தாமல் எவ்வளவுதூரம் அர்ப்பணிப்போடு இருப்போம் என்கிற இந்தக் கதை அந்தப் பத்திரிகையாள நண்பருக்கும் ஆதியோடு அந்தமாகத் தெரியும்.

பின்னர் இரு பத்திரிகையாளர்களுக்குஇடையேஇருந்த பிணக்குக்காரணமாகஒருவர் மற்றவர் பற்றி இப்படியொரு செய்தியை வரவழைத்து மனஉழைச்சலைஏற்படுத்த முன்றார் என்பதை அறிந்துகொண்டோம். அதில் விபத்தில் சிக்கியவர் என்று கூறப்பட்ட பத்திரிகையாளர்யார், அந்தப்பொய்யைச் செய்தியாக்க முயன்றவர் யார் என்றெல்லாம் அவருக்கும் தெரியும். அதனால், செய்தியின் உண்மைத்தன்மை குறித்து என்னிடமிருந்த அவர் எந்தப் பதிலையும் எதிர்பார்த்தவராகத் தெரியவில்லை.

அதேநேரம், அந்தச்செய்தி உண்மைதானா என்பதை உறுதிப்படுத்தப்சம்பந்தப்பட்ட பலதரப்புக்களும்தன்னைத் தொடர்புகொண்டவிடயத்தை அவர் தெரியப்படுத்தினார். இந்தியவட்டாரங்கள்மற்றும் இந்தியாவைநம்பியிருக்கும் புலம்பெயர் தரப்புக்கள் எல்லாம் இதில் கூடுதல் கரிசனை எடுத்ததாக அவர் தெரிவித்தார். செய்தி நம்பத்தகுந்ததுதானா, உண்மையானதுதானா என்பது குறித்தும் அவரே மேலதிக தகவல்களையும் தெரிவித்தார்.

பேராயர் கர்தினாலின் செய்தி அப்படியே ஒளிப்பதிவு செய்யப்பட்டு கொழும்பில் உள்ள சிங்களத் தொலைக்காட்சிகளில் அப்படியே காட்டப்படுகின்றது. பேராயர் ஒன்றும் அந்தக் கணப்பொழுதில் மனதில்பட்டதைப் பேசவில்லை. தனது உரையை நன்கு தயார்ப்படுத்தி 4 பக்க ஆவணமாக எடுத்து வந்து அதனைப் பார்த்துத்தான் வாசிக்கிறார். அந்தளவிற்குத் தான் என்ன சொல்லப்போகிறோம், யாருக்குச்சொல்லப்போகின்றோம், அதன் தாக்கம் என்ன என்பது தெரிந்துதான் அவர் கருத்துரைத்திருக்கிறார். அதைத் தமிழ்த் தொலைக்காட்சி ஒன்றும்கூட அப்படியே மொழிபெயர்த்துப் பின்னர் தனது செய்தியில் சேர்த்துக்கொண்டிருந்தது. நீங்கள் எழுதியிருப்பவற்றைவிடவும் அதிகமாக கர்தினால்கூறியிருக்கின்றார் என்றார் நண்பர்.

அவரதுஅழைப்புத்துண்டிக்கப்பட்டு சிறிது நேரத்தில் மற்றொருஅழைப்புவந்தது. எங்கள் செய்திகள் குறித்து அரசியல் ரீதியாக விமர்சிக்கக்கூடிய நண்பர் ஒருவரிடமிருந்து அந்த அழைப்பு வந்தது. எடுத்த எடுப்பிலேயே, இந்தியாக்காரர்களுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என்றார். நான் எதுவும் தெரியாதது போன்று, ஏன்? என்ன நடந்தது? என்றேன். ''இல்லை! 30 வருடப் போராட்டத்திற்குப் பிறகும், இத்தனையாயிரம் இளம் உயிர்கள்பலிகொடுக்கப்பட்ட பிறகும், இறுதிப் போரில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்களைக் காவு கொடுத்த பிறகும் 13ஐ ஒரு தீர்வாகத் தமிழர்கள் மீது மனச்சாட்சியின்றி சிங்களவர்களுடன் சேர்ந்து திணிக்கப்பார்க்கும் இந்தியாவுக்கு, இதுவேண்டியதுதான்" என்றார் அவர். நான்பேசாமல் கேட்டுக்கொண்டேன். நான் எதையாவது சொல்லப்போக, அதை அப்படியே ரெக்கோட் பண்ணி, எங்கேயாவது இடக்குமுடக்காகப் போட்டுக் காட்டக்கூடிய ஆள் அவர் என்பதால், அவர் சொல்வதை மட்டும் அமைதியாகக் கேட்டுக்கொண்டேன்.

"அப்பாவி இளைஞர்களை அழைத்துக்கொண்டுபோய் ஆயுதப்பயிற்சியும்கொடுத்து ஆயுதங்களையும் கொடுத்து இந்தப் பிரச்சினையை அதன் வலுவுக்கு மீறி விரைவாகவே ஊதிப் பெருப்பித்து பிரச்சினையாக்கி இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டவர்களை அழித்த பிறகு, இப்போது தங்கள் நலனை மட்டுமே பார்க்கும் இந்தியர்களுக்கு கர்தினால் சரியான சாட்டையடிதான் கொடுத்திருக்கிறார். அவர் இப்போதைக்கு ஜேவிபியின் அரசியல் கருத்துக்களுடன் ஒத்துப்போகிறார் போலக் கிடக்கிறது. ஜேவிபியும் இப்படித்தான் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டைநோக்கிச் செல்கிறது. அனுரகுமாரவின் பேச்சுக்களைப் பார்க்கும் போது இது தெரிகிறது. இனி இவர்கள் பாலம் கட்டிய மாதிரித்தான், 13மாதிரித்தான் இந்தப் பாலமும் பேப்பரில் மட்டும் கட்டப்பட்டிருக்கும்'' என்று பொரிந்து தள்ளினார்.

"இந்தியாஉசுப்பேற்றினால், அதற்கு எடுபட்டுக்கொண்டு போய் ஆயுதப் பயிற்சியும் எடுத்து ஆயுதங்களையும் வாங்கிக்கொண்டுதிரும்பும் அளவிற்கு உங்களுடைய இளைஞர்களுக்கும்அரசியல் தலைவர்களுக்கும் அறிவு மழுங்கியிருந்தது என்றா நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டு அவர் வாயைக் கொஞ்சம் அடக்கிவிட்டு அழைப்பைத் துண்டித்துக்கொண்டேன்.

யார் செய்தது சரி, யார் யாரை ஏமாற்றினார்கள் என்பதையெல்லாம் காலம்தான் இறுதியில் முடிவு செய்யும். இங்கே வென்றவர்கள் எழுதியதே வரலாறு, உண்மை என்கிற போது வெல்லும் வரையில் எந்தச் சரி பிழைகளையும் சொல்லும் தகுதி தமிழர்களுக்கு இருப்பதாக நான் நினைக்கவில்லை. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வாசகர்களே! விரும்பினால் மின்னஞ்சல் மூலம் அதை நீங்கள் என்னோடு பகிர்ந்துகொள்ளலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மருந்துத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்துவிட்டது.

இந்த நிலையை இறப்புகளின் எண்ணிக்கையை வைத்து மட்டும் மதிப்பிடாதீர்கள். இறப்பை நெருங்கி வந்து காப்பாற்றப்பட்ட நோயாளிகள் எத்தனை பேர்? உயிரிழக்கும் அளவிற்கு எத்தனை நோயாளிகள் சிக்கல்களை எதிர்கொண்டார்கள்?

உதாரணத்திற்கு நீரிழிவு நோய்க்கு மருந்தை உட்கொள்ளும் ஒருவர் அடுத்த மாதம் வைத்தியரிடம் வருகிறார். எனினும் நீரிழிவு அதிகமாக உள்ளது. அடுத்த மாதமும் நீரிழிவு அதிகமாகஉள்ளது. மருந்தை உட்கொண்டாலும் நோய் நிலைமை அதிகரித்துள்ளது.

நோயாளி சர்க்கரை அதிகம் சாப்பிடுகிறார் என்றுவைத்தியர்நினைத்து மாத்திரைகளின் டோஸ் அதிகமாக வழங்குகிறார் அல்லது மருந்துகளின் வகைகளை அதிகமாக வழங்குகிறார். அப்போதும் நோய் கட்டுப்படவில்லை. ஏனெனில் அரச வைத்திய சாலைகளில் வழக்கமாகக் கிடைக்கும் மருந்து வகை அவருக்குக்கிடைக்கவில்லை. அதன் பிறகு அந்த நபர் தனியார்மருந்தகத்தில்வேறு வகையான மருந்துகளை வாங்குகிறார். நோய் கட்டுப்படுகிறது.

அங்கு ஒரு இறப்பு ஏற்படவில்லை. உயிரிழப்பு ஏற்படவில்லை என்றாலும் அதுகொல்லாமல் கொல்லும் ஒரு செயன்முறை ஆகும்.

அதாவது மருந்தின் தரம் குறைந்துவிட்டது என்பது நோயாளிக்கு தெரியாது. வைத்தியருக்கும் தெரியாது. இந்த நிலை பற்றி நான் ஒரு மாதத்திற்கு முன்பே தெரிவித்தேன்.

இது ஒரு அவசர நிலை. அமைச்சரவை உடனடியாக கூடவேண்டும்.

யாரும் ஒன்று கூடி தீர்மானத்தைமேற்கொள்வதில்லை. இது இப்போது யாருக்கும் முக்கியமில்லை.. இந்த ஆட்சியாளர்களுக்கு இதுஒரு பிரச்சனையேயல்ல - என அவர் மேலும் தெரிவித்தார்.

## உள்நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில், பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் இனிமேலும் செயற்பட முடியாது என்று குறிப்பிட்ட அமைச்சர், இந்நாட்டில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்போது பதிவுசெய்யப்பட்டு வருகிறது.

தற்போதுபாதாளஉலகக் குழுக்களுக்கு இடையில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதுடன், அவர்கள் தங்களுக்குள்ளேயே மோதிக்கொள்கி;ன்றனர், குறிப்பாக போதைப்பொருள் தொடர்பாக இடம்பெறும் மோதல்களே இவ்வாறு அவர்கள்குழுக்களாகப்பிரிந்து தாக்குதல்களில் ஈடுபடக் காரணமாக அமைகின்றது.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட அமைச்சர், பொறுப்புள்ள அரசு என்ற வகையில், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு செயலையும்செய்ய எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பிலான முழுமையான விசாரணை அறிக்கையை கத்தோலிக்க திருச்சபைக்கு வழங்கநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பான பொலிஸ்விசாரணைகளுக்கு கத்தோலிக்க திருச்சபையும் ஒத்துழைப்புவழங்க முடியும் - என்றார்.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளது.

கொலையாளிகளைக் கைது செய்வதற்கான விசாரணைகளை வெல்லம்பிட்டிபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்பில் இடம்பெற்றுவரும் தொடர்ச்சியான துப்பாக்குச் சூட்டுச் சம்பங்களின் தொடரில் இறுதியாக நடந்துள்ள சம்பவம் இது.

## இனவாதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூடிமறைக்கப்பட்டன.

மக்கள் இன்று உண்மையை உணர்ந்துள்ளனர். நாட்டில் இரு பிரதான முகாம்கள்தான் உள்ளன. ஒன்று தேசிய மக்கள் சக்தி, அதுமக்கள்ஆட்சிக்கானசக்தி. மற்றைய முகாம் ஊழல், மோசடிகளில்ஈடுபடும்அணி. எனவே, தேசிய மக்கள் சக்தி ஆட்சிஅமைந்தால்தான் நாடு முன்னேறும்.

இன்று இனவாதத்தைத் தூண்டுகின்றனர். கஜேந்திர குமார் பொன்னம்பலம் எம்.பியின் வீடு சுற்றிவளைக்கப்படுகின்றது. குருந்தூர்மலை பிரச்சினை வருகின்றது. இவற்றைத் தோற்கடிக்க வேண்டும். அனைத்து இன மக்களும் சம உரிமை அனுபவிக்கும் வகையில் அமைதியான நாட்டை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பு - என்றார்.

## பிரமிட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரமிட் மோசடி மூலம் சுமார் 4 கோடி ரூபாவிற்கும் மேல் மோசடிசெய்துள்ளனர் என்று பொலிஸ் தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

மோசடியில் ஈடுபட்டவர்கள் அதிகூடிய வாடகைக்கு பொரளையில் ஒரு வீட்டைப்பெற்று வசித்து வந்துள்ளனர். இந்த வீட்டில் திருட்டு இடம்பெற்றதாக ஓகஸ்ட் 19 பொரளை பொலிஸில் இந்த இரு சீனர்களில் ஒருவர் முறைப்பாடு செய்திருந்தார்.

வான், 7 மடிக்கணினிகள் மற்றும் 1 கோடி 70 இலட்சம் ரூபா பணம் என்பன திருட்டப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது. திருட்டுப் போன பொருட்களின் மொத்தப் பெறுமதி 4 கோடி ரூபாய் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்தசி.சி.ரி.வி கமரா பதிவுகள் ஊடாக பொலிஸார் விசாரணை நடத்தினர். அதனடிப்படையில் 3 சந்தேகநபர்களையும் பொலிஸார் அடையாளம் கண்டனர். அவர்களில்இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

கைதானவர்களில் ஒருவர் இந்தச் சீனர்களின் வாகனச் சாரதியாகப் பணியாற்றியவர் என்பதையும் பொலிஸார் கண்டுபிடித்தனர். இதனால் சந்தேகம்கொண்ட பொலிஸார் விசாரணையைத் தீவிரப்படுத்தினர். இதில் இரு சீனர்களுமே தமது சாரதி உள்ளிட்டவர்களுக்கு 15 லட்சம் ரூபாய் பணம் கொடுத்து திருட்டுநாடகத்தை அரங்கேற்றியுள்ளனர்என்பது தெரிய வந்திருக்கிறது.

இதையடுத்து இரு சீனர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்நிலையில் அவர்களிடம் நடத்திய விசாரணையில், கொழும்புதுறைமுகநகரத்தில் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதாக கூறி மறைமுகமாக இவர்கள் இருவரும் நாட்டில் பெரும் பிரமிட் மோசடியில் ஈடுபட்டு வந்தமைதெரியவந்துள்ளது.

சுமார் 4 கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளதையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

மோசடி மூலம் தாம் திரட்டிய கோடிக்கணக்கான பணத்தினை சூதாடியே தொலைத்துள்ளனர். அதனைமறைப்பதற்காகவே இவ்வாறான போலி திருட்டு நாடகம் ஆடியுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

## அன்டிபயட்டிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த தடுப்பூசியின் 21000 டோஸ் கொண்ட மருந்து தொகுதியிலிருந்து 18000 டோஸ்கள் இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றில் ஒரு தடுப்பூசி தொடர்பில் மாத்திரமே இந்த நிலை பதிவாகியுள்ளது. இது தொடர்பாக ஆராய்வதற்காக நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது - என்றார்.

## உற்பத்தியில்லா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்பட்டன. தண்ணீர் நிரப்பப்பட்டது. எனினும் அதில் உப்பு விளைவிக்கப்படவில்லை. இந்தநிலையில்கடந்தமோதங்களுக்கும் மேலாக அங்கு உற்பத்திப் பணிகள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே இந்த உப்பள விரிவாக்கத்துக்காக மேலும் 50 ஏக்கர் நிலத்திற்கும் அனுமதி கேட்டு மொத்தமாக 100 ஏக்கரில் உப்பளம் அமைப்பதற்கான அனுமதி கேட்டு அமைச்சரவைக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

உப்பளத்திற்குத் தேவையான அரச நிலத்திற்கான பரிந்துரையைப் பிரதேச செயலாளர் வழங்கியதன் அடிப்படையில் சுற்றுச்சூழல் அதிகார சபையும் தமது பரிந்துரைய வழங்கியுள்ளது.

## சர்ச்சைக்குரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிப்பதற்கான சாத்தியங்களை ஆராயும் நோக்கில் இந்தப் பயணம் இடம்பெற்றதாகத் தெரிவிக் கப்பட்டது.

மாவட்டச்செயலகத்தில் ஓகஸ்ட் 16 இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இந்தக் களப் பயணம் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான இ.சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான் ஆகியோருடன் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் மகேஸ்வரன், மாவட்டத்தின் மேலதிக செயலர்களான கனகேஸ்வரன், குணபாலன், பிரதேச செயலாளர், தொல்லியல், வனவளம், வனஉயிரிகள் மற்றும் நில அளவை திணைக்களங்களின் அதிகாரிகள் எனப் பலரும் இந்தக் களப் பயணத்தில் இணைந்திருந்தனர்.

இந்தப் பயணத்தின் அடிப்படையில் உடனடியாக ஓர் விசேட அறிக்கை இந்தக் குழுவினரால் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்தஅறிக்கையின் அடிப்படையில விடுவிக்கக்கூடிய நிலங்களை இனங்காணுவதே நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. குருந்தூர்மலையில் 1933ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியில் 78 ஏக்கர் மட்டுமே தொல்லியல் பிரதேசமாக வர்த்தமானி அறிவித்தல் உள்ள நிலையில் தறபோது அதனை அண்டிய பகுதியில் மேலும் 300 ஏக்கரை தொல்லியல் திணைக்களம் அபகரிப்பதே சரச்சையின் அடிப்படையாக காணப்பட்ட சூழலில் இப் பயணம் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு அபகரிக்கப்படும் பகுதிகள் ஏற்கனவே தமிழ் மக்களின் விவசாயத்திற்கெனப் பகிர்ந்தளிக்கப்பட்ட பகுதிகளாக இருப்பதால் தொடர்ந்து சர்ச்சை நிலவி வருகின்றது.

## உள்நாட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலவீதிகளுக்குள்பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டது.

அதற்கிணாங்க, காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையான காலப்பகுதிக்குள் கொழும்புகோட்டைபொலிஸ் பிரிவிலுள்ள ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி போன்ற அரச நிறுவனங்களுக்குள்பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டது.

இதனை தவிர, ஊவுரு சந்தியிலிருந்து செரமிக் சந்தி, லோட்டஸ் வீதி, யோர்க் வீதி, வங்கி மாவத்தை, காலி முகத்திடல் சுற்றுவட்டத்திலிருந்து என் எஸ் ஏ சுற்றுவட்டம் வரையிலான காலிவீதிகளுக்குள்பிரவேசிப்பதற்கும்தடைவிதிக்கப்பட்டது.

அத்துடன், பொது மற்றும் தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கக்கூடாது எனவும் மக்களை தூண்டும் வகையில் வன்முறைச் சம்பவங்களில்ஈடுபடக்கூடாது எனவும்நீதிமன்றஉத்தரவில் கூறப்பட்டிருந்ததோடு இந்த உத்தரவை மீறுவது தண்டனைக்குரிய குற்றம் எனவும் நீதிமன்றம் கூறியிருந்தது.

கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துயாழ்ப்பாணத்திலும் 9 தொழிற்சங்கங்கள் இணைந்து யாழ். செயலகத்திற்கு முன்பாக நண்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தன.






# மருந்து, மருத்துவ மாபியாக்கள் தொடர்பில் குற்றச்சாட்டுகள் கெஹலிய மீது முன்வைக்கப்பட்டதால் பதவி விலக வேண்டும்

## முஜிபுர் வலியுறுத்து



நாட்டின் சுகாதாரத்துறை மீது கொண்ட நம்பிக்கையை மக்கள் முற்றாக இழந்துள்ளனர். நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள சுகாதாரத் துறையை மீட்டெடுக்க அமைச்சர் கெஹெலிய இதுவரையில் எந்த ஒரு வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ளவில்லை.

மருந்துமற்றும்மருத்துவமாபியாக்கள் தொடர்பில் அமைச்சர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர் பதவி விலக வேண்டும்.

பதவி விலகுவதைத் தவிர அவருக்கு வேறுவழியில்லை எனஐக்கியமக்கள்சக்தியின் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாகவும், அமைச்சரை பதவி விலகக்கோரியும் கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் கையெழுத்து சேகரிக்கப்பட்ட போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நாட்டின் சுகாதார துறை பாரியதொரு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. சுகாதாரத்துறைமீதுகொண்டநம்பிக்கையை மக்கள் முற்றாக இழந்துள்ளனர்.

வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு, தரமற்ற மருந்து கொள்வனவு, அவசர மருந்து கொள்வனவு மற்றும் அதன் காரணமாக பறிக்கப்படும் அப்பாவி மக்களின் உயிர்கள் என மக்கள் சுகாதார துறை மீது அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அமைச்சர் இடத்தில் எந்த ஒரு வேலைத்திட்டங்களும்கிடையாது. மருந்து தட்டுப்பாடு எனும் போர்வையில் அவசர மருந்து கொள்வனவு மூலம் அதிக விலை கொடுத்து மருந்துகளைக் கொள்வனவு செய்து சுகாதார துறையை ஒரு வர்த்தக மாக மாற்றியிருக்கிறார்.


துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட முன்னர் உரிய மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

மாறாக, தொடர்ச்சியாக கோடிக் கணக்கில் பணத்தை கொடுத்து மருந்து கொள்வனவை மேற்கொள்கிறார். நாட்டு மக்கள் இந்த மருந்துகளை அதிகம் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். நாட்டில் விசேட வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை, அதிகளவிலான வைத்தியர்கள் நாட்டை விட்டுவெளியேறியுள்ளனர். எதிர் காலத்திலும் வைத்தியர்கள்வெளியேறஉள்ளனர் எனத் தெரிவிக்கப்படும் நிலையில் இவ்வாறு வெளியேறும் தரப்பினரை தடுத்துநிறுத்துவதற்கும்கூட உரிய நடவடிக்கைகளை அவர் முன்னெடுக்கவில்லை.

மருந்துமற்றும்மருத்துவமாபியாக்கள் தொடர்பில் அமைச்சர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர் பதவி விலக வேண்டும். பதவி விலகுவதை தவிர அவருக்கு வேறு வழியில்லை. - என்றார். (05)

# அழிக்கப்பட்ட பாடசாலை உபகரணங்களை வறிய மாணவர்களுக்குப் பகிர்ந்திருக்கலாம்

## ஓமல்பே சோபித்த தேரர் கூறுகிறார்



தரமற்றவை என கூறி சுங்கத் துறையினரால் அழிக்கப்பட்ட பாடசாலை உபகரணங்களைவறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்குபகிர்ந்தளித்திருக்கலாம்.

வறுமையில் வாடும் மக்கள் வாழும் இந்த நாட்டில் தான்தோன்றித்தனமான தீர்மானங்களை மேற்கொள்ளாமல் கிடைக்கபெறும் வளங்களைப் பாதுகாக்குமாறு கூறும் புத்தரின் போதனைகளை அனைவரும் பின்பற்றிநடக்கவேண்டுமென ஓமல்பே சோபித்த தேரர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைமாணவர்கள் பயன்படுத்தும் பல கோடி ரூபா மதிப்புள்ள காலணிகள், புத்தக பைகள், தொப்பிகள் போன்றபல உபகரணங்கள் தரமற்றவை எனக் கூறி சுங்கத் துறையினரால் கைப்பற்றப்பட்டுஅழிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

உணவுப்பொருள்கள்மற்றும் மருந்துகள் தரமற்றவை எனகூறிஅதனைஅழிப்பதை ஏற்றுக்கொள்ளலாம்.

இருப்பினும்பாடசாலை உபகரணங்கள் தரமற்றவை என்பதால் அது உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துமா? பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தனது பாடப்புத்தகங்களைகொண்டு செல்வதற்கு புத்தகப்பை இன்றிபொலித்தீன் பைகளில் எடுத்துச் செல்லும் எத்தனை மாணவர்கள் நாட்டில் இருக்கிறார்கள்?

சப்பாத்து இல்லாது செருப்பைஅணிந்துசெல்லும் மாணவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அழிக்கப்பட்ட பாடசாலை உபகரணங்களை வறுமைக்கோட்டின் கீழ் வாழும் எத்தனை மாணவர்களுக்கு பகிர்ந்தளித்திருக்க முடியும்.

சுங்கத்தினர் கூறுவதை பார்க்கும் போது இன்றும் நம் நாட்டில் பயன்படுத்தப்படும் சிலநிறுவனங்கள்தயாரிக்கும் பாடசாலை புத்தகப் பைகள் மற்றும் காலணிகள் தரமானகவாக உள்ளனவா?

தரமற்ற உபகரணங்களை பயன்படுத்துவதால் உடல் ரீதியான பாதிப்புகள் எதுவும் ஏற்படா. நீங்கள் வழக்கத்துக்கு மாறான மருந்து அல்லது உணவை உட்கொண்டால் அது ஒருவரின் உடலைப் பாதிக்கும்.

ஆனால் ஒரு புத்தகப் பையும் இல்லாமல், ஒரு ஜோடி செருப்பும் இல்லாமல் இருக்கும் மாணவர்கள் இந்த உபகரணங்களை அழிக்கும் செயற்பாட்டை பார்க்கும் போது கவலை அடைவார்கள் அல்லவா?. - என்றார். (05)

# நாம் சிங்கள பௌத்தத்துக்கு எதிரானவர்கள் அல்லர் தமிழர் உரிமை பறிக்கப்படுவதையே எதிர்க்கிறோம்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விளக்குகின்றார்



ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் உரிமை சகலருக்கும் உண்டு. இருப்பினும் நாம் சிங்கள பௌத்தத்துக்கு எதிரான வர்கள் அல்லர். மாறாக எமது மக்களின் உரிமைகளைப் பறிக்கக்கூடியவகையிலும், தமிழர்களின் தொல்லியல் அடையாளங்களை அழிக்கக்கூடியவகையிலும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளையே நிறுத்துமாறு கோருகின்றோம் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெற்கில் அனுபவிக்கும் சுதந்திரத்தை தாம் வடக்கில் அனுபவிப்பதற்கு இடமளிக்க வேண்டுமென வலியுறுத்தி பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தலைமையிலான குழுவினர் அவரது கொழும்பு இல்லம் முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை முன் னெடுத்திருந்தனர்.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட கஜேந்திர குமார்பொன்னம்பலம், 'எமது செயற்பாடுகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மை வாய்ந்தவையாக இருக்கின்றன. அதேபோன்று தமது கருத்துக்களை வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உரிமை சகலருக்கும் உண்டு. அதனை நாம் மறுதலிக்கவில்லை என்று தெரிவித்தார்.

அதேவேளை தாம் ஒருபோதும்சிங்களபௌத்தத்துக்கு எதிரானவர்கள் அல்லர் என்றும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந் துள்ள நீண்டகாலமாக மத வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் பௌத்த விகாரைகளை அப்புறப்படுத்துமாறு தாம் கோரவில்லைஎன்றும்சுட்டிக்காட்டிய அவர், மாறாக எமது மக்களின் உரிமைகளைப் பறிக்கக்கூடியவகையிலும், தமிழர்களின் தொல்லியல் அடையாளங்களை அழிக்கக்கூடியவகையிலும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளையே நிறுத்துமாறு வலியுறுத்துகின்றோம் எனக் குறிப்பிட்டார்.

'தொல்பொருள் சின்னம் அல்லது பௌத்த சின்னம் என்ற பெயரில் தமிழ்மக்களின் அடையாளங்களையும் சரித்திரத்தையும் அழிப்பதற்கோ அல்லது மாற்றியமைப்பதற்கோ நாம் ஒருபோதும்இடமளிக்கமாட்டோம். அதனை முன்னிறுத்தியே நாம் செயற்பட்டுவருகின்றோம்' என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். இது இவ்வாறிருக்க, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இல்லத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதாகவும், இது வேண்டுமென்றே இனவாதத்தைத் தூண்டும் நோக்கில்முன்னெடுக்கப்பட்ட செயற்பாடு என்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

மேலும் இதுபற்றிக் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியமக்கள்முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், தமிழ்மக்கள் சார்பில் உண்மையிலேயே போராடுவதுடன் தமிழர்களின் வாழ்விடங்களில் முன்னெடுக்கப்படும் பௌத்த சிங்கள நிகழ்ச்சிநிரலை வெளிப்படையாகவே எதிர்க்கின்ற தமிழ் அரசியல் வாதியாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இருப்பதாலேயே அவரது இல்லத்துக்கு முன்பாகப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்டார்.

முன்னர் பொலிஸார் மூலம் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல், இப்போது இத்தகைய போராட்டங்கள் மூலமும் 'வீட்டை எரிப்போம்' என்றகோஷங்கள் ஊடாகவும் விடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (05)

# வில்பத்து, தப்போவ காடுகளில் வேட்டைக்குச் சென்றோர் கைது

## 12 பேர் பிடிபட்டன; 8 பேர் தப்பியோட்டம்








வில்பத்து மற்றும் தப்போவ சரணாலயங்களில் வேட்டைக்குச் சென்ற 4 குழுக்களைச் சேர்ந்த 12 பேர் கருவலகஸ்வெள மற்றும் வண்ணாத்திவில்லு வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் ஞாயிற்றுக்கிழமைஅதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 8 பேர் தப்பியோடி உள்ளனர் எனவும் அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். வில்பத்து மற்றும் தப்போவ சரணாலயங்களில் தொடர்ந்தும் சட்டவிரோதமாக விலங்குகள் வேட்டையாடப்பட்டு வருவதாக தெரிவித்த நிலையில், இரண்டு நாள்களாக தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு துப்பாக்கிகள், 16 ரவைகள், 7 உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரவைகள், வேட்டைக்கு பயன்படுத்தப்படும் வெடிபொருள்கள், 5 தொலைபேசிகள், 7 கத்திகள் மற்றும் 7 மோட்டார் சைக்கிள்கள் வேட்டைக்கு பயன்படுத்தப்பட்ட ஏனைய பொருள்கள் இவ்வாறு கைப்பற்றப்பட்டன என வனஜீவராசிகள்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 12 பேரையும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் ஞாயிறு மாலை பிணையில் விடுவித்துள்ளதுடன், புத்தளம் நீதிமன்றில் ஆஜர்படுத்து-வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக வனஜீவராசிகள்திணைக்கள அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். (05)

# இந்தியக் கரிசனைகளுக்கு முரணான எந்தச் செயல்களையும் ஆதரிக்கோம்

## சுமந்திரன் திட்டவட்டம்



இந்தியாவின் நட்பு நாடு அல்லாத, இந்து சமுத்திரப் பிராந்தியத்தைச் சாராத சீனா, இப்பிராந்தியத்தின் பிறிதொரு நாட்டில் முன்னெடுக்கக்கூடியசில நடவடிக்கைகள் இந்தியாவுக்குப் பாதுகாப்புக் கரிசனைகளைத் தோற்றுவிப்பது முற்றிலும் நியாயமானது என சுட்டிக்காட்டியுள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இந்தியாவின் கரிசனைகளுக்கு முரணான எந்தவொரு செயற்பாட்டையும்தாம் ஆதரிக்கப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இந்தியப்பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இவ்வாரம் இலங்கைக்கு விஜயம்செய்யவிருக்கும் அதேவேளை, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி 'ஷியான் 06' என்ற சீன ஆய்வுக்கப்பல்நாட்டுக்கு வருகைதரவுள்ளது.

இவை இலங்கையில் இந்திய - சீன இராஜதந்திர மோதலுக்கு வழிவகுக்கும் எனவும், மேற்குறிப்பிட்ட நாடுகளுடனான இலங்கையின் இருதரப்பு உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அரசியல் விமர்சகர்கள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர்.

இருப்பினும் இலங்கைக்கும்இந்தியாமற்றும் சீனாஆகியநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளில் எவ்விதமான பதற்றங்களும் இல்லை என்றும், இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் மற்றும் சீன ஆய்வுக்கப்பலின் வருகை என்பன நிகழ்ச்சிநிரலிடப்பட்டதன் அடிப்படையில் நடைபெறுவதால்எவ்விதமான குழப்பங்களும் இல்லை என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனைகள் நியாயமானவை என்று இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியிருக்கும்இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், இவ்விவகாரத்திலும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைந் துள்ள இந்தியாவெளிப்படுத்தும் பாதுகாப்புதொடர்பான கரிசனைகள் முற்றிலும் நியாயமானவை என்று சுட்டிக்காட்டினார்.

இந்தியாவுக்கு சார்பாக செயற் பட வேண்டும் என்ற நோக்கில் இக்கருத்தை வெளியிடவில்லை எனக் குறிப்பிட்ட அவர், 'இந்தியா இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் உள்ளது. இருப்பினும் சீனா இப்பிராந்தியத்துக்கு உட்பட்ட நாடு அல்ல. எனவே இந்தியாவின் நட்பு நாடு அல்லாத சீனா, இப்பிராந்தியத்தின் பிறிதொரு நாட்டில் முன்னெடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள் இந்தியாவுக்கு பாதுகாப்புசார் கரிசனைகளைத் தோற்றுவிப்பது நியாயமான தொன்றேயாகும்' என்று தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி இந்தவிடயத்தில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை என்று இலங்கை அரசாங்கம் கூறுவதில் அர்த்தமில்லை என்றும், மாறாக இதில் இந்தியாவின் கருத்துக்கு இடமளிக்கவேண்டும் என்றும் வலியுறுத்திய சுமந்திரன், இந்தியாவின் கரிசனைகளுக்கு முரணான எந்தவொரு செயற்பாட்டையும்தாம் ஆதரிக்கப்போவதில்லை எனக் குறிப்பிட்டார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வெளிக்கிளம்பும் தேசியவாதம்

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு என்கிற பெயரில் நவதாராளமயமாதலுக்கு ஆதரவாக அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் – குறிப்பாக நாட்டை ஒவ்வொரு பக்கமாக வெளிநாடுகளுக்கு விற்கும் முயற்சிகள் – கடுமையான விமர்சனத்தை நோக்கி நகரத் தொடங்கியுள்ளன. அடுத்த ஆண்டில் அரசுத்தலைவர் தேர்தல் வரவுள்ள நிலையில், அதனை நோக்கியதாக இந்த விடயம் இலங்கையின் தேசியவாதமாக பரப்புரைக்களத்தை ஆக்கிரமிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதை இப்போதைக்கு மறுக்கமுடியாது.

இந்த தேசியவாத பரப்புரையில் இலங்கை – இந்திய உறவுகள், ஒப்பந்தம் என்பன கடுமையாக நசிபடும் அறிகுறிகளும் தெரிகின்றன.

''இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மின்சாரப் பரிமாற்றக் கட்டமைப்பை மேற்கொள்ளவுள்ளனர். அதேபோன்று இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் எண்ணெய்க் குழாய் கட்டமைப்பை உருவாக்கப் போகிறார்கள். தற்பொழுது இலங்கைக்கும் இந்தியாவுக்கு இடையிலான வர்த்தக கொடுக்கல் வாங்கல்களின்போது இந்திய ரூபாயே பயன்படுத்தப்படுகின்றது.

இரு நாடுகளுக்கும் இடையில் தரை வழியிலும் கடல் வழியிலும் ஆகாய வழியிலும் தொடர்புகளை வலுவாக ஏற்படுத்த முயற்சி செய்கின்றார்கள். மட்டக்களப்புக்கும் சென்னைக்கும் இடையில் புதிதாக விமான சேவை தொடங்கப்படவுள்ளது. இவற்றின் அடிப்படையில் பார்க்கின்றபொழுது, அன்று போன்று தற்போதும் எமது நாட்டின் இறைமையை மீட்கும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டி ஏற்படுகின்றது" என்று தெரிவித்திருக்கிறார் ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸநாயக்க.

ரணிலின் ஆட்சி முடிவுக்கு வரும்போது நாடு முற்றுமுழுதாகத் தனது இறைமையை இழந்திருக்கும் என்றும் அவர் எதிர்வுகூறியிருக்கிறார். அதாவது நாடு முழுமையாக ஏனைய நாடுகளின் ஆக்கிரமிப்பில் இருக்கும் என்று அழுத்துகிறார்.

நாட்டின் தற்போதைய நிலை காரணமாக அது பலமானநாடுகளின் விளையாட்டுமைதானமாகிவிட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜிப் பிரேமதாஸவும் தெரிவித்திருக்கிறார். நாடு ஏலத்தில் விடப்படுகின்றது என்றும் மக்கள் ஆணையில்லாத ஆட்சியாளர்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி பலம்வாய்ந்த நாடுகள் தமது பங்கைப் பிரித்தெடுப்பதில் கவனமாக இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை – இந்தியா இடையே பாலம் அமைப்பதையும் இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகள் பலப்படுவதையும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

இவையெல்லாம் அடுத்த தேர்தல் களம் தேசியவாதக் கருத்துக்களால் ஆக்கிரமிக்கப்படுவதற்கான அறிகுறிகளாகவே தெரிகின்றன. முந்தைய தேர்தல்கள் இனவா, மதவாத, பயங்கரவாத கருத்துக்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததைப் போன்றே அடுத்த தேர்தல் தேசியவாதக் கருத்துக்களால் நிறைக்கப்படும் சாத்தியங்கள் அதிகமிருக்கின்றன. இந்தத் தேசியவாதக் கருத்துக்களால் நாட்டைக் காப்பாற்ற முடியும் என்கிற நிச்சயம் எதுவும் இல்லை என்கிறபோதும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அது பாதகமாகவே அமையும் என்பதை எதிர்பார்க்கலாம். ஏனெனில் இங்கே தேசியவாதம் என்பது பௌத்த, சிங்கள வாதமே தவிர இலங்கையின் அனைத்து மக்களுக்குமான தேசியம் அல்ல.

# கற்பகதரு என்னும் அற்புதம்
# ஒலைகளின் உன்னதம்

அங்கம் – 11



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

தென்னையினைப் பிள்ளை என்றே யாவரும் அழைத்து மகிழ்வார்கள். அப்படிக் கற்பகதருவான பனையினை அழைத்து மகிழ்வதும் இல்லை. ஆனால் கற்பகதரு என்று வியந்து மட்டுமே நிற்பதையே காணுகிறோம். தமிழ் மூதாட்டி ஔவைகூட தென்னையினைப் பார்த்து தளரா வளர் தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால் என்று நட்பினைப் பற்றிச் சொல்லும் பொழுது - மூதுரையில் சொல்லி, தென்னையினை முன்னிறுத்திக் காட்டுகிறார். நாலடியாரோ வேறு விதமாய் காட்டுகிறது. நாலடியாரின் நோக்கில் தென்னையைவிடப் பனையே சிறப்பாகப் பார்க்கப்படுகிறது.

கடையார் நட்பிற் கமுகனையர் ஏனை
இடையார் தெங்கின் அனையர் – தலையாயர்
எண்ணரும் பெண்ணைபோன்று இட்ட ஞான்று இட்டதே
தொன்மையுடையார் தொடர்பு

தென்னையைவிடப் பனை தான் நட்பு என்று வரும் பொழுது உச்சத்தில் நிற்கிறது என்று நட்பின் நிலைபற்றி சொல்லும் நிலை யில் நாலடியார் இப்படிப் பார்க்கிறது. பாக்குமரத்துக்கு தினமும் தண்ணீர் ஊற்ற வேண்டும். அப்போது தான் அது பயன்தரும். நாளும் உதவினால் நட்புடன் இருப்பவர் கமுகு போல்வர். இது கடை நட்பாகும். இடையிடையே நீர்பாய்ச்சி வந்தால்த்தான் தென்னை உதவும். அவ்வப்போது உதவி செய்தால்த்தான் உதவிடுவார் போல. அந்த நட்பை இடை நட்பு எனலாம். ஆனால் பனை அப்படியல்ல. ஒரு முறை செய்த நன்மையினை நினைத்து நட்புப் பாராட்டும் நட்புடையார் போல் இருப்பதுதான் பனை. பனை விதையினை வைத்து ஒருதரம் நீர் ஊற்றி விட்டால் அது தனது காலம்-வரை உதவிய படியே இருக்கும் என்று நாலடியார் பார்க்கும் பார்வை கற்பகதருவின் முக்கியத்துவத்தை எப்படிக் காட்டுகிறது பார்த்தீர்களா !

தென்னையினைப்பிள்ளை என்று போற்றி வீட்டில் நீரூற்றி வளர்க்கிறோம். தென்னையும் பலனைக் கொடுக்கிறது. தென்னை ஓலையா, பனை ஓலையா கூடிய பயனை நல்கிறது என்று பார்க்கும் பொழுது - பிள்ளையெனப் பேணும் தென்னையின் ஓலையைவிட - முரட்டு மரம், கருக்குகள் நிறைந்த மரம். கறுத்த மரம், என்றெல்லாம் எண்ணி நிற்கும் பனை மரத்தின் ஓலைகள் பல மடங்கில் உதவி நிற்பதைக் காண்கிறோம். தென்னையின் ஓலையில் கருக்கு இல்லை. அது மென்மையாய் இருக்கும். தென்னை ஓலையின் பயன் பாடு என்பது ஒரு குறிப்பிட்ட அளவுடன் நின்றுவிடுகிறது. ஆனால் பனை ஓலையின் பயன்பாடு - அதன் ஆயுட்காலம் முடிந்த பின்பும் பயன் கொடுத்தே நிற்கிறது என்பது கருத்திருத்த வேண்டிய தெனலாம்.



பனையும் தென்னையும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல. ஆனாலும் பனை கொடுப்பதுபோல் தென்னையால் கொடுத்திட முடி யாது. தென்னையின் நிலைவேறு. பனையின் நிலைவேறு. தென்னையின் ஓலை யால் வீடு வேய்கிறோம். பனையின் ஓலையினாலும் வீடு வேய்கிறோம். தென்னையின் ஓலைகளை அப்படியே எடுத்து வீடு வேய்ந்திடப் பயனாக்கிட முடியாது. அதனைக் காய விட்டு பின் நீரில் ஊறவிட்டு பின் அதனை பின்னி கிடுகு என்னும் நிலைக்குக் கொண்டுவந்த பின்பே பயன்படுத்த முடிகிறது. ஆனால் பனையின் ஓலையினை சற்று வதங்க விட்ட பின்னர் ஓலையின் மட்டைகளை நீக்கியவுடன் அவற்றை அப்படியே வீடு வேய்வதற்கு பயன்படுத்தி விடுகிறோம். கிடுகினால் அடைக்கும் வேலிகளை விட பனை ஓலைகளினால் அடைக்கும் வேலிகள் மிகவும் பாதுகாப்பானதாகவும் கருதப்படுகின்றன. தென்னையின் ஓலைகளில் பன்ன வேலைகள் செய்வது என்பது பொருந்தாமலே இருக்கிறது.

பனை ஓலைகளே பன்ன வேலைகளுக்கு பெரும் பயன் உள்ளவையாக அமைகின்றன என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.



தென்னையின் ஓலைகள் ஒரு குறிப்பிட்ட அளவுடன் தனது பயனை நிறுத்தி விடுகிறது. ஆனால் பனையின் ஓலையின் நிலையோ பன்மடங்காகி - ஒரு கைத்தொழிலுக்கான மூலப்பொருளாய் ஆகி பல பேருக்குத் தொழிலினையும் அவர்களுக்கான வாழ் வாதாரத்துக்கான வருவா-யினையும் வழங்கும் நிலையில் உதவி நிற்கிறது என்பதையும் கருத்திருத்தல் அவசியமேயாகும். பனையின் ஓலைகளைக் கொண்டு ஆடம்பரப் பொருடகள் முதல் அவசியமான பொருட்கள்வரை ஆக்கப்படுகின்றன. பனை ஓலையினாலான பல பொருட்கள் விவசாயத்திலும் துணையாக வந்து நிற்கின்றன என்பதும் நோக்கத்தக்கதாகும்.

படுக்கப் பாய் ஆகிறது. குழந்தைகளை எண்ணெய் வைத்து சூரிய ஒளியில் வைப்பதற்கு நல்ல ஆரோக்கியாமான தடுக்காகிறது. இன்று இந்த நடைமுறை கிராமங்களில் இருப்பதைக் காணமுடிகிறது. குழந்தைகளுக்கு தலை முதல் கால்வரை எண்ணெய் தடவி தடுக்கு என்னும் பெயர் தாங்கி நிற்கும் பனை ஓலையினாலான சின்னப் பாயில் முற்றத்தில் குழந்தையை வைப்பார்கள். குழந்தையும் - கையையும் காலையும் ஆட்டி அசைந்து இருந்து கொடுக்கும் காட்சியை பார்ப்பதற்கு மிகவும் பரவசமாய் இருக்கும். அந்தப் பரவசத்துக்கு கைகொடுக்கும் பனை ஓலைத் தடுக்கினை நினைத்துப் பாருங்கள்! எத்தனை ஆனந்தமான உணர்வு உள்ளத்தில் வரும்! நெற்கதிர்களை சூடு மிதிக்கவும், நெல்மணிகளை வெய்யிலில் காய வைக்கவும் களப்பாய் என்னும் பெயரில் கைகொடுத்தும் நிற்கிறது பனை ஓலை. களம் என்றாலே வயலும், சூடு மிதிப்பதும், மாடுகளும், நெற்கட்டுகளும் அங்கு நிற்கும் ஆண்களும் பெண்களும் தான் நினைவில் வந்து நிற்கிறது அல்லவா! களத்தில் சூடு மிதித்து வந்த நெல்மணிகளை வீட்டுக்கு எடுத் துச் செல்வதற்கு பெரிய கடகமாய் பனை ஓலை அமைவதும் நோக்கத்தக்கது. கடகம் என்றால் அதில் பலவகைகள் இருக்கின்றன. பெரிய கடகங்க ளும் இருக்கின்றன. சிறிய கடகங்களும் இருக்கின்றன. கடகம் என்றாலே அது பனை ஓலைக்கு மட்டுமே சொந்தமான பொருள் என்று தான் சொல்ல வேண்டும். தென்னை ஓலையினால் கடகம் என்பதை எண்ணியே பார்க்கவே முடியாது. பாரங்களைத் தாங்கும் நிலை தென்னோலை பெற்றிருக்கவில்லை. தூரமானாலும் பாரத்தைத் தாங்கி சுமந்து செல்லும் வலிமையினைப் பனை ஓலைதான் பெற்றிருக்கிறது என்பது மனங்கொள்ளத் தக்கதேயாகும்.

நெல்லினைக் குற்றி அதனை அரிசியாக எடுக்கும் பொழுதும் அந்த அரிசியினை நிரப்பி வைக்கவும் கட கங்கள் வந்து நிற்கும். அரிசியை உரலில் இட்டு இடித்து மாவாக்கி நிற்கும் வேளையிலும் மாவினை வைக்கும் பாத்திரமாய் கடகங்கள் மாறியே விடுகின்றன.

(6ஆம் பக்கம் பார்க்க)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# திஸ்ஸ அத்தநாயக்க முல்லைக்கு வருகை










ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவுக்கு விஜயம் செய்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கானவிஜயத்தின்போது புதுக்குடியிருப்புஆனந்தபுரம் செபஸ்தியார்தேவாலயத்துக்கு சென்று, அங்கே மக்களுடன் அவர் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து, வற்றாப்பளை கண்ணகி அம்மன்ஆலயத்துக்குசென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

முல்லைத்தீவு ஹிஜ்ராபுரம் முகைதீன் ஜூம்மா பள்ளிவாசலுக்கு சென்று மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டார்.

அடுத்து, ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில்மக்கள்சந்திப்பில் ஈடுபட்டதன் பின்னர், முல்லைத்தீவு ஊடக அமையத்தில்ஊடகசந்திப்பில்திஸ்ஸ அத்தநாயக்க பங்கேற்றார்.

அவரது விஜயத்தில் முல்லைத்தீவுமாவட்டஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான அமைப்பாளர் லக்சயன் முத்துக்குமாரசாமி, உதவி அமைப்பாளர் எஸ்.சத்தியசுதர்சன்,வவுனியாமாவட்ட இணைஅமைப்பாளர்ரசிக்கா பிரியதர்சனி போன்றோரும் இணைந்திருந்தனர். (05)

## மாத்தறை நீதிபதியின் காவலரான பொலிஸ் சார்ஜன்ட் சுட்டுக்கொலை

மாத்தறை மாவட்ட நீதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் ரி-56 ரக துப்பாக்கியால் மார்பில் சுடப்பட்டு சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளதாக மாத்தறை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கெனதுறை தல்பாவில மெத பொல தோட்டத்தைச் சேர்ந்த 54 வயதுடைய பந்துல புஷ்பகுமார என்பவரேஉயிரிழந்துள்ளார். இவரது மார்பில் இரண்டு முறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. சடலம் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் சந்தேகத்துக்கிடமான துப்பாக்கிகாணப்பட்டதாகப்பொலிஸார் தெரிவிக்கின்றனர்.(05)

## சிலாபம் வீடு ஒன்றினுள் எரிந்த நிலையில் சடலம்

சிலாபம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இலிப்பதெனிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் ஒருவர் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இலிப்பதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் சுமார் மூன்று வருடங்களாகத் தனது சகோதரியின் வீட்டில் தங்கியிருந்த நிலையில், சகோதரி வீட்டில் இல்லாத நேரத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

## பொலிஸாரை கண்டதும் 'ஐஸ்'ஸை வாயில் விழுங்கியவர் வைத்தியசாலையில் சேர்ப்பு

### மற்றொருவர் கைது

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பாலமீன்மடு பிரதேசத்தில் ஐஸ் போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரு வியாபாரிகளை ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதன்போது ஒரு போதைப்பொருள் வியாபாரி போதைப்பொருளை வாயில் போட்டு விழுங்கியதையடுத்து அவரை வைத்தியசாலையில் பொலிஸார் சேர்த்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து, சம்பவதினமான ஞாயிறு பிற்பகல் பொலிஸார் பாலமீன்மடு பிரதேசத்தில் வீதி கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இதன்போது, வியாபாரத்துக்காக ஐஸ் போதைப்பொருளை எடுத்துச் சென்ற 31வயது மற்றும் 19 வயதுடைய இருவரை பொலிஸார் மடக்கிப்பிடித்து கைதுசெய்ததுடன் அவர்களிடமிருந்து 10 மில்லி கிராம் மற்றும் 15 மில்லிக்கிராம் நிறையுடைய போதைப்பொருளை மீட்டனர்.

இதில் 19 வயதுடையவர் பொலிஸாரை கண்டு ஐஸ்போதைப்பொருளை வாயில் போட்டு விழுங்கியதையடுத்து, அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட மற்றைய வியாபாரியை விசாரணைகளின் பின்னர் நேற்று (திங்கட்கிழமை) நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

## குருந்தூர்மலையில் குழப்பத்தைத் தூண்டியவர் தொடர்பாக முறைப்பாடு இல்லாததால் எவரையும் கைதுசெய்யவில்லை

### பொலிஸ் பேச்சாளர் கூறுகிறார்

குருந்தூர்மலையில் குழப்பத்தை தூண்டியவர் குறித்து எந்தவித முறைப்பாடுகளும் இல்லாததால் இது தொடர்பில் எவரையும்கைதுசெய்ய முடியாத நிலையில் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குருந்தூர் மலையை அடிப்படையாக வைத்து உருவாகும் குழப்பநிலைக்குகாரணமான நபரைபுலனாய்வுப்பிரிவினர் அடையாளம் கண்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கேள்வி எழுப்பியவேளை, இதுதொடர்பில் எந்த முறைப்பாடும் முன்வைக்கப்படவில்லை. நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை எனப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு முறைப்பாடுகள் அவசியம். முறைப்பாடுகள் இல்லாமல்விசாரணைகளை முன்னெடுக்கவோ கைது செய்யவோ முடியாது.

எனினும் குருந்தூர் மலையை சுற்றியுள்ள பகுதிகளில் இடம்பெற்ற சிறிய சம்பவங்கள் தொடர்பாக அரசியல் தலையீடுகள் இல்லாமல் விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

## யாழ். மாவட்ட நீர்நிலைகள், கேணிகளை துப்புரவுசெய்ய மாவட்ட செயலர் அறிவுரை

யாழ்ப்பாணமாவட்டத்தில் சிறிய நீர்நிலைகள் மற்றும் கேணிகளை திங்கட்கிழமை முதல் ஒரு வாரத்துக்கு சிரமதானம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. சிறிய நீர்நிலைகள் மற்றும் கேணிகளை பிரதேச செயலாளர்களின் ஒருங்கிணைப்பு மேற்பார்வையில் அந்த நீர் நிலைகளுக்கு பொறுப்பானபிரதேசசபைகள் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்க ளம் போன்றன நடவடிக்கை வேண்டுமென வும் தீர்மா னிக்கப்பட்டது.

யாழ்ப்பாண நகரப் பகுதியிலுள்ள இயற்கையான குளங்கள் மற்றும் கேணி களைத் தனியார் ஆக்கிரமிப்புகளில் இருந்து பாதுகாக்க அந்த நீர் நிலைகளுக்குப் பொறுப்பான திணைக்களங்களால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட செயலாளரால் அறிவுறுத்தப்பட்டது. அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற வரட்சி தொடர்பான கலந்துரையாடலில்குறித்தவிடயம் தொடர்பில் ஆராயப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்ட தூர் வாரப்படாத குளங்கள் மற்றும் கேணிகளை மாநகர சபை பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் பொது அமைப்புகள் மற்றும் தனியார் மூலமாக தூர்வாரி சுத்தப்படுத்த முடியுமெனவும் அதற்கு சில நிறுவனங்கள் தாமாகவே முன்வருவார்களென யாழ்ப்பாண பிரதேச செயலாளரால் குறிப்பிடப்பட்டது. மேலும் மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேச செயலக பிரிவுகளிலுமுள்ள இவ்வாறானகேணிகளையும் நீர்நிலைகளையும் துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் மாவட்டத்தின் பல்வேறு பொதுக்கிணறுகள், விவசாய கிணறுகள் பல பாழடைந்து பயன்பாடற்று காணப்படுவதாலும் அவற்றை சுத்தப்படுத்தினால் குடிநீர்த் தேவைக்கு அவற்றைப் பயன்படுத்த முடியுமெனவும்எதிர்காலத்தில் நன்னீரை சேமித்து வைக்க அவற்றை பயன்படுத்த முடியுமெனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய இவ்வாறான கிணறுகள் பற்றிய விவரங்களை ஒரு வார காலத்தினுள் சமர்ப்பித்து வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கும் அவ்வப் பிரதேச மக்களுக்கு வேலைக்காக உணவு பெறும் திட்டத்தினூடாக அந்தக்கிணறுகளை துப்புரவு செய்வதற்கான சாத்தியம் பற்றி ஆராயுமாறு உலக உணவுத் திட்ட அலுவலரிடம் மாவட்டச் செயலர் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (05)

## திருமண நிகழ்வில் நடனமாடிய யுவதி திடீரென சுகவீனமடைந்து உயிரிழப்பு

### மொரகஹஹேனவில் சம்பவம்



திருமண வைபவம் ஒன்றில் நடனமாடிக்கொண்டிருந்த யுவதியொருவர் திடீரென சுகவீனமடைந்து உயிரிழந்துள்ளார் என மொரகஹஹேன பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஹொரண பதுவிட்ட பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனமொன்றில்விற்பனைஅதிகாரியாக பணிபுரிந்த மஞ்சரி ஆதித்யபெர்னாண்டோஎன்ற 25 வயதுடைய யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த யுவதி, தான் பணிபுரியும் நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவரின் திருமண நிகழ்வில் கலந்துகொண்டு, அங்கு நடனமாடியுள்ளார் எனப் பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த யுவதி மேலும் இரு யுவதிகளுடன் நடனமாடிக்கொண்டிருந்த போது அந்த இடத்தை விட்டுச் சென்றார் எனவும் சிறிது நேரத்தில் சுகவீனமடைந்து ஹொரணை பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் பொலிஸார்தெரிவிக்கின்றனர்.

ஹொரணை வைத்தியசாலைக்கு யுவதியை அழைத்துச் சென்றதையடுத்து, பரிசோதனையின் போது அவர் உயிரிழந்துள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்தனர் எனப் பொலிஸாரின் விசாரணைகளில்தெரியவந்துள்ளது. (05)

# கற்பகதரு என்னும் அற்புதம்....





அரிசியைச் சோறாக்கி வயலில், தோட்டத்தில், வேலை செய்யும் அப்பாவுக்கோ. கணவனுக்கோ, மாமனுக்கோ எடுத்துச் செல்வதற்கும்பனைஓலையினால் ஆகியஅழகானஓலைப்பெட்டிகளே வந்து நிற்கும். பனை ஓலைப் பெட்டிகளில் கொண்டு செல்லும் உணவுகள் சுவையாகவும்,நல்ல வாசத்தைத் தருவன வாகவும் இருக்கும். இவையெல்லாம் அனுபவித்தவர்களுக்கே தெரிய வரும். வயல் வரப்புகளில் கொய்யகம் வைத்த கண்டாங்கிச் சேலையினைக்கட்டிக்கொண்டுதலையிலே பனை ஓலையினாலாகிய ஓலைப் பெட்டியைபெண்கள்கொண்டுசெல்லும்காட்சியை ஒருதரம் எண்ணிப் பாருங்கள்.என்னதான் நாகரிகங்கள் வந்து குவிந்தாலும் இந்த காட்சிக்கு ஈடு இல்லை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

தோட்டத்தில் நீரிறைக்கப் பட்டை என்னும் நிலையில் பனை ஓலை வந்துவிடும். கிணற்றில் நீரினை அள்ளி தோட்டத்து வாய்க்காலுக்கு நீரினைப் பாய்ச்சிட உதவிடும் பட்டை மிகவும் பெரியதாய் இருக்கும்.அதில் கொள்ளப்படும் நீரானது வீச்சுடன் ஓடி வாய்க்கால் வழியே பயிர்களின் பாத்தியை நிரப்பி நிற்கும் காட்சியை அனுபவித்தர்களுக்கு மட்டுமே தெரியும். நீரிறைக்கும் இயந்திரங்கள் வருமுன்னர் - அதிகளவு நீரினை கிணற்றினின்றும் மொண்டு மேலே இலகுவாய் கொண்டுவர பனை ஓலைப் பட்டைகளே கைகொடுத்தன என்பதைக் கருத்திருத்தல் வேண்டும். பயிரிடப்பட்ட பயிர்களுக்கு ஏற்றபடி நீரினை வழங்குவதற்கும் கைப்பட்டை என்னும் வடிவில் சிறிய பட்டையும் பனை ஓலையினால் ஆக்கப்பட்டது.

தோட்டத்தில் காய்த்துக் குலுங்கும் காய்கறிகளைப் பிடிங்கிப் போடுவத ற்கும் பனை ஓலையினாலான பெட்டிகள் உதவி இருக்கின்றன. குரக்கனை அறுவடை செய்து அதன் தாள்களிலிருந்து மணிகளை வேறாக்குவார்கள். அங்கும் களப்பாய் வந்துவிடும். களப்பாயிலிருக்கும் குரக்கன் மணிகளை அளந்து எடுப்பதற்கும் கூட பனை ஓலையினாலாகிய பெட்டிகளையே பயன்படுத்தினார்கள். குரக்கன் மணியினை மாவாக்குவதற்கு திரிகை என்பது பயன்படுத்தப்படும். அந்தத் திருகைக்கல் வைத்திருக்க அடித்தளமாய் பனை ஓலையினால் ஆகிய வட்டச் சுளகு அங்கே கைகொடுக்கும். அரைத்த குரக்கன் மாவினால் பிட்டவிக்க பயன்படும் நீத்துப் பெட்டியும் பனை ஓலை தான். அவித்த குரக்கன் பிட்டினை இறக்கி வைக்க வந்து நிற்பதும் பனை ஓலைப் பெட்டிதான். அந்தப்பிட்டுடன் இணைத்து சாப்பிட இனிப்பாய் நிற் கும் குட்டானும் பனை ஓலையின் பாதுகாப்பில்த்தான் இருக்கும்என்பதும்கருத்திருத்த வேண்டியதேயாகும். சமையல் கட்டிபயன்படுத்து-வதற்கு என்று ஒரு பெட்டி இருக்கும் அதன் பெயர் அஞ்சறைப் பெட்டியாகும்.அஞ்சு அறைகள் கொண்டதாய் பனை ஓலையில் அந்தப் பெட்டியை இளைப்பார்கள். அந்தப் பெட்டிக்கு பொருத்தமாய் மூடியும் இருக்கும்.இதில் சமையலுக்கான முக்கிய கறிச் சரக்குகளை வைத்திருப்பார்கள். காய்கறிகளை, அரிசியை, பருப்பு வகை களை பனை ஓலைப் பெட்டிகளில் வைக்கும் பொழுது உடலுக்கு ஆரோக்கியமாகவும்,சுவையினைக் கொடுப்பதாகவும் இருப்பதாய் -சொல்லப்படுகிறது.

தடுக்காவேன் குழைந்தைக்கு
சமைத்த உணவினை
எடுப்பதற்கும் கொடுப்பதற்கும்
என்னாளும் துணையாவேன்
படுத்திருக்கப் பாயாவேன்
பனங்குட்டான் உறையாவேன்
நிலத்தில் பலகாயவிட
நீள்களப்பாய் ஆகிடுவேன்
நீரிறைக்கப் பட்டையாவேன் நெல்சுமக்க கடகமாவேன்
புட்டவிக்க உதவிடுவேன்
புட்டையேந்த வந்திடுவேன்
தட்டாவேன் சுளகாவேன்
சகலதுமாய் நானாவேன்
தென்னோலை உதவிடினும்
என்போல அதுவிருக்கா
நானென்றும் மக்களுக்காய்
நாளுமே உதவிடுவேன்
பனையோலை என்றெண்ணி
பரிகாசம் செய்யாதீர் !

# பழைய மாணவர்கள் ஒன்று கூடலில் நடனமாடிய கனேடியர் உயிரிழப்பு

## யாழ். தெல்லிப்பழையில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழையில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் பழைய மாணவர் ஒன்று கூடலில் நடனமாடிக்கொண்டிருந்த கனடாவைச் சேர்ந்தவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம், மல்லாகம் பகுதியைச் சேர்ந்தவரும், தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வசித்து வருபவருமான நாகராஜா சசிதரன் (வயது 61) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை மகாஜன கல்லூரி பழைய மாணவர் ஒன்று கூடல் கடந்த சனிக்கிழமை தெல்லிப்பழை பகுதியில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் இடம்பெற்றது. அதன் போது, பாடல் ஒன்றுக்கு நடனமாடிக்கொண்டு இருந்தவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(05)

# வவுனியா இரட்டைக் கொலை பிரதான சந்தேகநபரின் சகோதரன் மீது தாக்கு

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவத்துடன்தொடர்புடைய பிரதான சந்தேக நபரின் சகோதரர் மீது சிலர் தாக்குதல் மேற்கொண்டதில் அவர் காயமடைந்து வவுனியா வைத்திசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரின் சகோதரர் மீதே ஞாயிற்றுக்கிழமை இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் வசித்து வரும் தவசிகுளம் பகுதியில் வைத்து இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தத்தாக்குதல்சம்பவத்தில் பிரதான சந்தேக நபரின் சகோதரரான 37 வயதுடைய நபர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். 05)

# கந்தானை கடவையில் ரயில் - லொறி விபத்து

கந்தானை ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள ரயில் கடவையில் ரயில் ஒன்றால் லொறி மோதப்பட்ட சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

இந்தவிபத்தில்எவருக்கும்காயம்ஏற்படவில்லைஎனவும், ரயில் சேவைகள் வழமைபோன்று இடம்பெறுகின்றன எனவும் ரயில்வே கட்டுப்பாட்டுப் பகுதி தெரிவித்துள்ளது.

லொறியின் பின் பகுதியையே ரயில் மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)



# ஹற்றனில் கோர விபத்து; இளைஞன், யுவதி காயம்

ஹற்றனில் அதிக வேகத்துடன் பயணித்த மோட்டார் சைக்கிளொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இளைஞர் ஒருவரும், யுவதியும் காயமடைந்து, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் ஹற்றன் மல்லியப்புஸ்டிதரன்தோட்டப் பகுதியிலேயே சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஹற்றனில் இருந்து கொட்டகலை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த குறித்த மோட்டார் சைக்கிள், அதிக வேகத்தால் சறுக்கிச் சென்று, 'காட் கல்லில்' மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த இருவரும் டிக்கோயா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது. மேலதிக விசாரணைகளை ஹற்றன் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# பொலிஸார் போன்று தோற்றமளித்த நால்வரால் கந்தானையில் கொள்ளை

கந்தானை பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு அருகில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்று தோற்றமளித்த நால்வர், ஒருவரின் மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசியை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக கந்தானை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொள்ளையிடப்பட்டவற்றின் பெறுமதி 3,50,000 ரூபா என கந்தான பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜா -எல பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (05)

# வெலிகமவில் 15 வயதுச் சிறுமி கடத்தப்பட்டதாக முறைப்பாடு

கைத்தொலைப் பேசிக்கான மீள் நிரப்பு அட்டையைக் கொள்வனவு செய்வதற்காக வீட்டுக்கு அருகிலுள்ள கடையொன்றுக்கு சென்ற சிறுமியை யாரோ கடத்திச் சென்றதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் 15 வயது சிறுமியே கடத்தப்பட்டுள்ளார்.

சிறுமியின் தந்தையான 57 வயதுடைய நபரே முறைப்பாடு செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் தொலைபேசி அட்டை வாங்குவதற்காக கடைக்குச் சென்ற சிறுமி திரும்பி வர தாமதமானதால் சிறுமியின் தந்தை இந்த முறைப்பாட்டை பொலிஸில் செய்துள்ளார். இந்தச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

# நாம் மக்களுக்கு பெற்றுக்கொடுத்த காணிகளை வன உயிரிகள் திணைக்களம் மீளப்பெற்றது

## ரிஷாத் எம்.பி. குற்றச்சாட்டு

அதிகாரத்தில் இருக்கும் போது நாம் மக்களுக்கு வழங்கிய ஆயிரக்கணக்கான காணிகள் இன்று வனஜீவராசிகள் மற்றும் வனபரிபாலனத் திணைக்களங்கள் ஆகியவற்றால் கையகப்படுத் தப்பட்டிருக்கின்றன எனவும் முசலிப்பிரதேசத்தில் தற்போது 15 சதவீதமான காணிகளே மக்களின் பாவனைக்காக எஞ்சியிருக்கின்றன எனவும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார், முசலி வை.எம்.எம்.ஏ. கிளையின் ஏற்பாட்டில், முசலி தேசிய பாடசாலை கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய ரிஷாத் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு -

வை.எம்.எம்.ஏ. என்பது ஒரு பலம்வாய்ந்த நிறுவனமாகும். தேசிய ரீதியில் நல்ல பணிகளை செய்து வருகின்றது. சகோதரர் றிஸ்மி அதன் தலைவராக இருந்தகாலம் வை.எம்.எம்.ஏயிற்கு பொற்காலமாக அமைந்திருந்தது. ஆன்மீகம், அரசியல், கல்வி மற்றும் சமூக ரீதியிலும் வை.எம்.எம்.ஏ பல பணிகளையும் வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி, வரலாறு படைத்தது என்பதை நன்றியுணர்வுடன் கூற விரும்புகின்றேன். அதே போன்று, முசலி பிரதேசத்திலும் நல்ல பல வேலைத்திட்டங்களை வை.எம்.எம்.ஏ. முன்னெடுத்திருந்தது.

முசலி பிரதேசத்தில் குறுகிய காலத்துக்குள் நாம் பல பணிகளையும் வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தமை வெளிப்படையானது.

இந்த வைபவத்தில் பங்கேற்றிருக்கும் ஊர் கனவான்களுக்கு இந்த உண்மை தெரியும்.

அவர்களில் பலர் இதற்கு சாட்சிகளாகவும் உள்ளனர்.

முசலியில் வானளாவிய ரீதியில் உயர்ந்திருக்கும் மாடிக்கட்டடங்கள், பாடசாலைகள், மக்கள் குடியிருக்கும் வீடுகள் மற்றும் இன்னோரன்ன பணிகள் வானத்திலிருந்து திடீரென குதித்தவை அல்ல.

பண்டாரவெளி, கொண்டச்சி, பொற்கேணி ஆகிய பாடசாலைகள் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட சாஹிரா, அல்ஜாசிம் ஆகியவை மிகவும் குறுகிய காலத்தில் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டவையே. அப்போது, இப் பாடசாலைகளைத் தடைகள், சவால்கள் மற்றும் கஷ்டங்களுக்கு மத்தியில் நாங்கள் ஆரம்பித்த போது மாணவர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர். முசலிப் பாடசாலையை தேசிய பாடசாலையாக ஆக்க வேண்டுமென நாங்கள் பகீரத முயற்சிகள் எடுத்தபோது, மாணவர்களின் வரவு குறைவாகவே இருந்தது. எனினும், அமைச்சரவைக்கு விடே அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்தே அதில் நாம் வெற்றிபெற்றோம். அப்போது தேசியரீதியில் மூன்று பாடசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டன. அதில் முசலியும் ஒன்று.

நான் அமைச்சராக இருந்த போது, முச லிப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை மக்களுக்கு வழங்கியதால், வில்பத்துவை அழிப்பதாக என்மீது போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு நீதிமன்றம் வரை சென்றது. வேறு மாவட்டத்தில் மரம் நட வேண்டும் என எனக்கெதிராக தீர்ப்பும் வந்தது. 1100 மில்லியன் ரூபாவுக்கு மரம் நட்டு, பத்து வருடங்களுக்கு அதை பராமரிக்கும் செலவுடன், மொத்தமாக 116 கோடி ரூபா செலுத்தவேண்டுமென தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்புக்கு எதிராக நான் மேன்முறையீடு செய்துள்ளேன். அது குறித்த வழக்கு தொடர்ந்துகொண்டிருக்கிறது.

நான் அமைச்சராக இருந்த காலத்தில், முசலிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட கட்டடங்களைப் பார்க்கும்போது, உண்மையில் எனக்கு மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கின்றது. எனக்கு அந்த சக்தியை தந்த இறைவனுக்கு இந்த சந்தர்ப்பத்தில் நன்றி செலுத்துகின்றேன்.

நாங்கள் இந்தப் பிரதேசத்துக்குள் நுழையும் போது, நான்காம் கட்டையிலிருந்து சிலாவத்துறை வரை எங்குமே காடாகவே இருந்தது. மொத்தத்தில் முசலிப் பிரதேசம் முழுவதுமே வனாந்திரமாக காணப்பட்டது. நாங்கள் கால் வைக்கும்போது 'கண்ணிவெடி அபாயம் இருக்கின்றது. கால்வைக்க வேண்டாம்' என பொலிஸார் எச்சரித்தனர். 'பாலைக்குளிக்கு செல்ல வேண்டாம்' என பொலிஸார் அறிவுறுத்தினர். இந்தப் பிரதேசத்தில் அநேகமான இடங்களில் குடியேற்றம் நடந்த பின்னர் இறுதியாகவே கொண்டச்சியில் மக்களைக்குடியேற்றினோம். கொண்டச்சிகிராமத்தில் உள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்ற விடே வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்கி, எமது சொந்த நிதியில் கண்ணிவெடிகளை அகற்றி, மக்களை மீள்குடியேற்றினோம். சர்வதேச நிறுவனங்கள் பல இருந்தபோதும், அவர்கள் கண்ணிவெடிகளை அகற்ற உதவி செய்யவில்லை. காணிகளை அபகரிக்கும் எண்ணமே அவர்களிடம் இருந்தது.

புதிய பாடசாலைகளை உருவாக்கினோம், ஆசிரிய நியமனங்களை வழங்கினோம், சதிகளுக்கும் தடைகளுக்கும் பின்னாலேயே இந்தப் பணிகளில் வெற்றிபெற்றோம்.

கடந்த 3,4 வருடங்களாக நாம் மிகவும் அமைதியாக இருக்கின்றோம். எவராவது இந்தப் பணிகளை தொடரவேண்டுமெனவே விரும்புகின்றோம். எனினும், நாம் வழங்கிய காணிகளில் பல ஏக்கர்கள் இன்று வனஜீவராசிகள் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தட்டிக்கேட்க யாரும் இல்லை. பார்ப்பாரும் கேட்பாரும் அற்ற சமூகமாகவே இந்தப் பிரதேச மக்கள் வாழ்கின்றனர்.

அண்மையில் முல்லைத்தீவிலும் வவுனியாவிலும் பல்லாயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன, ஆனால் முசலிப்பிரதேசத்தில் எதுவுமே விடுவிக்கப்படவில்லை. ஜனாதிபதி காணிகளை விடுவிக்குமாறு கூறுகின்றார். 1984 ஆம் ஆண்டுக்கு பின்னர், வர்த்தமானியின் மூலம் கையகப்படுத்தப்பட்ட அனைத்து காணிகளையும் விடுவித்து, மக்களின் தேவைகளை நிறைவேற்றுமாறு அவர் கூறுகின்றார்.

அண்மையில் இடம்பெற்ற மன்னார் கூட்டத்தில், முசலிப் பிரதேசத்தில் ஒரு துண்டுக் காணியையேனும் விடுவிக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்படவில்லை. இந்த நியாயத்தை நாம் தெரிவித்தபோது, கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகள் 27ஆம் திகதி இதற்கென ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்து, அதைப்பற்றி பேசுவோம் என உறுதியளித்தனர்.

ஆனால், அவ்வாறு முடிவு எடுக்கப்பட்ட போதும் இங்குள்ள உள்ளூர் அதிகாரிகள் அதற்கான ஏற்பாடுகளை செய்யாமல் தலைமறைவாகிவிட்டனர். இதுதான் இன்றைய நிலை.

முசலியில் உள்ள கல்விமான்களும் ஊர் மக்களும் இது தொடர்பில் பேசவேண்டும். இவற்றைத் தட்டிக் கேட்க வேண்டும். நிலத்துக்காகவே வடக்கு, கிழக்கில் போராட்டங்கள் நடைபெற்றன.

1990 ஆம் ஆண்டு நாங்கள் வெளியேற்றப்பட்டபோது, 15 சதவீதக் காணிகளே வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு சொந்தமாக இருந்தது, இன்று நாங்கள் மக்களுக்குக் கொடுத்த காணிகளைக் கூட மீண்டும் வர்த்தமானியின் மூலம் கையகப்படுத்தியுள்ளனர். தற்போதைய சூழ்நிலையில் 15 சதவீதமான காணிகளே மக்களுக்கு இருக்கின்றது. எஞ்சிய எல்லாவற்றையும் வனஜீவராசிகள் திணைக்களம் அபகரித்து வைத்திருக்கின்றது.

ஆனால், சிலர் இவற்றை எல்லாம் கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

பிரதேச செயலாளர் இந்த அநியாயங்களை தொடர்ந்தும் செய்து கொண்டிருக்காமல், உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் நாங்கள் அமைதியான முறையில், ஜனநாயக ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாவோம் என்பதை ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உள்ளூர் அதிகாரிகளின் நிர்வாகக்கெடுபிடிகளால்தான் நமக்கு கஷ்டங்கள் தொடர்கின்றது என்ற உண்மையை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். - என்றார்.

(05)

# வேலையற்ற இளைஞர்களூடாக உற்பத்திப் பொருள் ஊக்குவிப்பு








பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வலயம் மற்றும் வெளிநாட்டுத் திட்டப்பிரிவு இணைந்து கிராமத்தில் வேலையற்ற இளைஞர்களினூடாக உற்பத்திப் பொருள்களை ஊக்குவிக்கும் நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வலயம் மற்றும் வெளிநாட்டு திட்டப்பிரிவு ஆகியவற்றின் நிதியனுசரணையில் நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் செயற்படுத்தலின் கீழ் கிராமிய உற்பத்திகளை பொதியிடும் நிலையம் மற்றும் கிராமிய உற்பத்திகளுக்கான கண்காட்சியும் சம்மாந்துறை சிறி கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் தலைவர் வினோஜ்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வின் கௌரவ அதிதியாக பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெளிநாட்டுத் திட்டச் செயலாளர் புவனேஸ்வரி சபாரத்தினம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் கங்கா சாகரிகா, நிஸ்கோ பணிப்பாளர் எஸ். சிறிவர்த்தன, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி யூ.எல். முபாரக் அலி, கிழக்கு மாகாண சொற்பொழிவாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் யுவஸ்ரீ கலா பாரதி சிவஸ்ரீ க.வி. பிரமீன்சர்மா, சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் உபதவிசாளர் எஸ். ஜெயச்சந்திரன், அகோரமாரியம்மன் ஆலயத்தின் செயலாளர் அழகுராஜன், உபதலைவர் மோகன், கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் இளங்கோபன்,

பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஏ. எல். இஸ்மாயில், மட்டக்களப்புதரவை -2 கிராம சேவகர் எஸ்.எம். பரீட், சமூர்த்தி உத்தியோகத்தர் சித்தி ஹிதாயா மற்றும் நியூ சன் ஸ்டார் இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது கிராமிய இளைஞர் உற்பத்திகளைப் பொதியிடும் நிலையம் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் 23 இளைஞர்களால் செய்யப்பட்ட சூழல் நேயமிக்க உற்பத்திப்பொருள்கள் மற்றும் உலர் உணவுப் பொருள்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்வில் வைத்துள்ளட்டுபல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்த புலமைப்பரிசில்களையும் வழங்கி வைக்கப்பட்டதுடன் பல நாடுகளில் சமூக மற்றும் சமய சேவைகளைச் செய்துவரும் பிரித்தானியா சைவ முன்னேற்றச்சங்கத்தின் வெளிநாட்டுத் திட்டச் செயலாளர் புவ னேஸ்வரி சபாரத்தினம் கௌரவிக்கப்பட்டனர்.

தற்போது ஐரோப்பா, அமெரிக்கா, கனடா மற்றும் ஆசிய நாடுகளில் பிளாஸ்டிக் பொருள்கள் கொஞ்சம் கொஞ்சமாக தடைசெய்யப்பட்டு வருகின்றன. இதனால் சூழல் நேயமிக்க பயன்பாட்டுப்பொருள்களுக்கு அதிக சந்தை வாய்ப்புக்கள் உள்ளன. இப்பொருள்கள் உற்பத்தி செய்வதற்காக இளைஞர்களுக்கு பயிற்சிகளையும் உதவிகளையும் வழங்கி, சூழல் நேயமிக்க பயன்பாட்டுப்பொருள்களைக் கொள்வனவு செய்து வெளிநாடுகளுக்கு நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகம் ஏற்றுமதி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கிராமத்துக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்களையும் உற்பத்தி செய்து வருகின்றன. இதற்கான நிதி உதவிகளை பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளையம் மற்றும் வெளிநாட்டு திட்டப்பிரிவு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களின் பூர்வீகத் தண்ணிமுறிப்பு கிராமம் மீள்குடியேற்றப்படும் வரை தொடர் போராட்டம்

## ரவிகரன் சூளுரை

தமிழர்களின் பூர்வீகக் கிராமமான தண்ணிமுறிப்பில், எமது தமிழ் மக்கள் மீளக்குடியமர்த்தும்வரை நாம் தொடர்ந்து மக்களோடு இணைந்து போராடுவோமென முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்புபகுதியில், தொல்லியல் மற்றும், வனவளத் திணைக்களத்தால் தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளநிலையில் அது தொடர்பில் ஆராய்வதற்கு அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், காணிகளுக்குரிய பொதுமக்கள் ஆகியோர் இணைந்து குறித்தபகுதிக்கு களவிஜயம் ஒன்றைமேற்கொண்டனர்.

குறித்த களவிஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

தண்ணிமுறிப்புப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு, தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

தற்போது 2023 ஆம் ஆண்டு ஆகிவிட்டபோதும் அந்த மக்களை மீளக்குடியேற்றுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில் தமது காணிகளைத் தாமே துப்புரவு செய்து, விவசாய நடடிக்கைகளையும் மேற்கொள்ளும் முயற்சியை மேற்கொண்டபோது, தொல்லியல் திணைக்களத்தாலும், வனவளத்திணைக்களத்தாலும் அதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன.

இவ்வாறிருக்க தமது பூர்வீக விவசாயமற்றும், குடியிருப்புக் காணிகளை மீட்க இந்த மக்களும், இந்த மக்களோடு, மக்கள் பிரதிநிதிகளான நாமும் தொடர்ந்து போராடிவருகிறோம்.

அந்தவகையில், இம்மாதம் 18 ஆம் திகதி, முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடலில் இந்த காணி விடுவிப்பு தொடர்பாலே, பேசப்பட்டது. அதற்கமைய நேரடியாக களவிஜயம் மேற்கொண்டு இங்குள்ள நிலைவரங்களைப் பார்வையிடுவதென முடிவு செய்யப்பட்டது.

அதற்கமைய தண்ணிமுறிப்பு பகுதிக்கு வருகை தந்து இந்த ஆக்கிரமிப்பிற்குள்ளான தமிழ் மக்களின் காணிவிடயம் தொடர்பான நிலைமைகள் தொடர்பில் பார்வையிட்டு சிலமுடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படயில் சில பகுதிகள் விடுவிப்பதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளதுடன், சில பகுதிகளை தற்போது விடுவிப்பதற்குமுடியாதசூழல்இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, விடுவிக்கப்பட முடியாத காணிகள் தொடர்பில் மாவட்டசெயலர் உரிய தரப்பினருக்கு எழுத்துமூலமாக அறிக்கை சமர்ப்பித்து அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.




அந்தவகையில் இந்த காணிவிடுவிப்புத் தொடர்பிலான எமதுமக்களதும், மக்கள் பிரதிநிதிகளான எமது தொடர் வலியுறுத்தலுக்கு கிடைத்த ஒரு முன்னேற்றமாக இதைப் பார்க்கின்றோம்.

இந்த மக்களின் காணிகள் அவர்களுக்குக் கிடைக்கும்வரை நாம் தொடர்ச்சியாக மக்களோடு துணை நிற்போம் - என்றார். (05)

# ஹற்றனில் மூடப்படும் பிரதான பஸ் தரிப்பிடம்

ஹற்றன் பஸ் தரிப்பு நிலையத்தில் தற்போது திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் திங்கட்கிழமைமுதல் பஸ் தரிப்பிடம் மூடப்பட்டுள்ளதாக பஸ் நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தினமும் ஆயிரக்கணக்கானபயணிகள்வருகைதரும் குறித்த பஸ் தரிப்பிடம் குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் பயணிகள் மிகுந்த அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இது தொடர்பில் தொடர்ச்சியாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய இந்தத் திருத்தப்பணிகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பஸ் தரிப்பிடங்கள் மாற்றப்பட்டுள்ளன எனவும் அதற்கமைய ஹற்றனில் இருந்து பொகவந்தலாவை, மஸ்கெலியா, ஒஸ்போன், நோட்டன், காசல்ரீ, சாஞ்சிமலை, ஓல்டன், போடைஸ் ஆகியவீதிகளில்பயணிக்கும் அரச மற்றும் தனியார் பஸ்கள் ஹற்றன் தபால் நிலையம் பகுதியிலும் ஹற்றனிலிருந்து கொழு-ம்பு, கண்டி, தலவாக்கலை, வட்டவளை, நாவலப்பிட்டி, நுவரெலியா ஆகிய பகுதிகளுக்கான அரச மற்றும் தனியார் பஸ்கள் கார்கில்ஸ் புட் சிட்டி அமைந்துள்ள பகுதிகளிலும்நிறுத்தப்படும்எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (05)

# 30ஆம் திகதி மட்டக்களப்பில் ஜனநாயகப் போராட்டம் வலிசுமந்த மக்களுக்கு துணையாக வருமாறு அழைப்பு

## முன்னாள் எம்.பி. ஸ்ரீநேசன் கோரிக்கை

யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகளாகியும் உண்மைகள் கண்டறியப்படவில்லை மாறாக, காணாமல் ஆக்கிய குற்றவாளிகளைப்பாதுகாக்கும் நிலையே இலங்கையில் காணப்படுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் குற்றச்சாட்டியுள்ளதுடன் தமிழ் உறவுகள் அனைவரும் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம் 30.08.2023 அன்று உலகளாவிய ரீதியில் அனுட்டிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் மு.ப 9,00 மணியளவில் மட்டக்களப்பிலும் அது தொடர்பான ஜனநாயக ரீதியான போராட்டம், கல்லடிப்பாலத்தில் இருந்து, காந்திப்பூங்கா வரை நடைபவனியாக மேற்கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகளாகியும் உண்மைகள் கண்டறியப்படவில்லை. நீதி வழங்கப்படவில்லை. இனியும் காணாமல் ஆக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கான உத்தரவாதம் அளிக்கப்படவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவில்லை.

மாறாக, காணாமல் ஆக்கிய குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நிலை இங்கு ஏற்பட்டுள்ளதோ என்று மக்கள் ஐயப்படுகின்றனர். அந்தக் குற்றவாளிகளுக்குப் பதவிகள், பதவியுயர்வுகள் வழங்கி கௌரவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதோ என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.

எனவே நீதிக்கான உள்நாட்டுப் பொறிமுறையைத் தமிழ் மக்கள் நம்ப முடியாதநிலையில், சர்வதேச நீதிப் பொறிமுறையை எமது உறவுகள் கோர வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த நீதியான உரிமைப்போராட்டத்தில் வலிசுமந்த மக்கள் அனைவரும் கலந்து கொள்வோம். பார்வையாளர்களாக அல்லாமல், பங்காளிகளாகி ஜனநாயக ரீதியாகப் போராட வாருங்கள் என்று அன்பாக அழைக்கின்றோம் என தெரிவித்தார். (05)

# ஆதி கதிர்காமத்திற்கு யாத்திரை



(வி.ரி.சகாதேவராஜா)

பிரபல இந்திய பணவளக் கலை நிபுணர் குபேரகுருஜீ ஆனந்த் சகிதம் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் இன்று காலை ஆதி கதிர்காமம் என அழைக்கப்படும் கபில்வத்தைக்கான யாத்திரையைத் தொடங்குகின்றது.

இலங்கையில் சித்தர்களின் தாய் வீடு என்று போற்றப்படும் ஆதிகதிர்காமம் கபில்வத்தைக்கான அற்புதமான, அமானுஷ்யமான, ஆபத்தான காட்டுவழியிலான இந்த யாத்திரை மொனராகலையிலிருந்து தொடங்கவுள்ளது.

சிவசங்கர் ஜி தலைமையிலான 30 பக்தர்கள் அடங்கிய குழுவினர் இதில் பங்கு பற்றுகின்றனர்.

செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை இரு தினங்களும் கபில்வத்தையில் தங்கியிருந்து இவர்கள் வழிபாட்டியற்றுவார்கள்.

கபில்வத்தையின் மகத்துவம்!

எந்த வித வெளியுலக தொடர்புமே இல்லாத சித்தர்களின் புனிதபூமி, முருகப் பெருமான் தவமியற்றி, அற்புத சக்திகளை பெற்று ஆதி சமாதியாகி ஒளியில் கலந்த அற்புத இடம், நவகோடி சித்தர்களுக்கும் முருக பெருமான் தவத்தை கற்று கொடுத்த இடம். போகர் பெருமான் ஆதியில் தவமியற்றிய தபோவனம்,

கதிர்காமத்தில் ஆதியில் இருந்த போகர் பெருமான் நவ பாஷாணங்களை கொண்டு உருவாக்கிய நவ பாஷாண வேல், நவாக்ஷரி யந்திரத்தை மறைத்து வைத்த இடம், கஜபாகு மன்னன் முதல் முதலில் இலங்கையில் கண்ணகி வழிபாடு நடத்திய இடம். இன்றுவரை இலங்கையில் சிம்மாசனத்தில் அமரும் அரசர்கள், அமைச்சர்கள் யாராக இருந்தாலும் இங்கு சென்று வழிபாடு நடத்திய பின்தான் பதவியில் அமர்ந்தனர். முதல் முதலில் சிங்கள வரலாற்றில் துட்டகைமுனு இதனைத் தொடங்கி வைத்தான்,

இன்று வரை வேற்று கிரகவாசிகள் வந்து இறங்கும் அற்புத இடமாக இந்த இடம் போற்றப்படுகிறது.

# விகாரையின் நிர்மானத்துக்கு திருமலையில் அனுமதி மறுப்பு

திருகோணமலை - நிலாவெளி, பெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருந்த விகாரையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கோரிய ஆர்ப்பாட்டம் திங்கட்கிழமை திருமலை மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.



இந்த ஆர்ப்பாட்டத்தில் பிக்குகள் மற்றும் பொதுமக்கள் ஈடுபட்டு வந்தனர். அவ்வாறு ஈடுபட்டவர்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடல் அரச அதிபர் அலுவலகத்தில் இடம் பெற்றபோது, குறித்த விகாரையை நிர்மாணிப் பதால் ஏற்படும் பிரச்சினை குறித்து தெளிவான விளக்கத்தை ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகளுக்கு ஆளுநர் தெளிவுபடுத்தியதுடன் அதற்கான அனுமதியும் மறுக்கப்பட்டது.

திருக்கோணமலை மாவட்டத்தில் அனைத்து இன மக்களும் வாழும் ஒரு மாவட்டமாகும். பிக்குகளின் செயற்பாடுகள் போல் ஏனைய இனத்தவரும் இவ் வாறானதொரு செயற்பாடுகளை முன்னெடுப்பார்களானால் அதற்கு நீங்களே ஒரு முன்னுதாரணமாக செயற்படுவீர்கள் என்றும் ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப்பெற்றாலும், பிரதேச சபையின் அனுமதியின்றி எந்த ஒரு கட்டுமானப் பணிகளும் முன்னெடுக்க முடியாதெனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில், ஆர்ப்பாட்டகாரர்களால் இந்தக் கூட்டம் இடைநிறுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இலுப்பைக்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட பொரலுகந்த ரஜமகா விகாரைக்குத் தடைவிதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே பிக்குகள் மற்றும் சில பொது மக்கள் திங்கட்கிழமை காலை தொடக்கம் மதியம்வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஏ6 பிரதான வீதியை வழி மறித்து இடம்பெற்றது. கிழக்கு ஆளுநருக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறும், பதாதைகளை ஏந்தியவாறு ஈடுபட்டனர்.

குறித்த பகுதியில் விகாரை அமைப்பதற்கு எதிராக தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலித்த கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் ஜனாதிபதியால் அப்பகுதியில் அமைக்கப்பட்ட விகாரையின் கட்டுமானங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையிலேயே இதற்கு எதிரான ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

காலாகாலமாக தமிழ் மக்கள் வாழுகின்ற பகுதிக்குள் விகாரை அமைத்தால் அது இன முறுகலை ஏற்படுத்தும் என்ற வகையிலும், இன நல்லிணக்கத்தை பாதிக்கும் என்ற வகையிலும் தமிழ் மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (05)

# 200 வருடங்கள் கடந்தும் மலையக மக்களின் வாழ்விட உரிமை இன்றும்கூட பேசுபொருளே

## மனித அபிவிருத்தி தாபனபணிப்பாளர் கலாநிதி சிவப்பிரகாசம் தெரிவிப்பு



(வி.ரி. சகாதேவராஜா)

இரண்டு நூற்றாண்டு காலமாக மலையக மக்கள் பலதுன்பங்களையும்துயரங்களையும் சவால்களையும் சந்தித்துவந்திருக்கின்றார்கள். இன்னும் அவர்களது வாழ்விடத்திற்கான உரிமை என்பது பேசு பொருளாகவே இருக்கின்றது.

இவ்வாறு மனித அபிவிருத்தி தாபனத்தின் ஸ்தாபகர் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பி பி . சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

அண்மையில் மாத்தளை ரத்வத்தை தோட்டத்தில் இடம்பெற்ற வாழிடத்திற்கான உரிமை மீறல் சம்பவம் தொடர்பாகச் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். ரத்வத்த தோட்டத்தில் தொழிலாளி ஒருவரின் தற்காலிக வீட்டை தோட்ட உதவி முகாமையாளர் இடித்து அழித்து அந்தக் குடும்பத்தினரை நடுத் தெருவில் நிறுத்தினர். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று மலையகம் 200 வருட கால வரலாறு பற்றி பேசுகின்றோம், கொண்டாடுகின்றோம். பெருமைப்படுகிறோம். ஆனால் இன்னும் அந்த மக்களுக்கான மனித உரிமைகள் வாழ்விட உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன.

ரத்வத்தை தோட்டத்தில் ஏழை குடிமகனின் குடிசை உதவி முகாமையாளரால் பேடித்தனமாக அடித்து



நொறுக்கப்பட்டது. அங்கு எமது பிரதிநிதி நடராஜா நேரடியாக சென்ற பொழுது அவர்கள் அழுதழுது சோக சம்பவத்தை கூறியுள்ளனர்.

யானை உடைத்தது போன்று மிலேச்சத்தனமாக மக்களது உடைமைகளை உடைத்து இருக்கின்றார்கள். இவர்களுக்கு அடித்து உடைக்க எந்த உரிமையும் இல்லை.

இந்த வரலாறு தொடரக் கூடாது. அவர்களது வீட்டில் ஒருநீடிப்பு செய்தால் அதனை போலீசில் முறையிட்டு தீர்த்துக் கொள்ள வேண்டும். அதைவிடுத்து இப்படி அடித்து உடைப்பதற்கு அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது.

எதிர்காலத்திலே சட்ட ரீதியாக இதனை அணுக வேண்டும். இது அரசியல் வாதிகளுக்கும் சமூக ஆர்வலர்களுக்கும் சமர்ப்பணம் - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.08.2023இல் வெளியிடப்பெற்றது.